Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 பங்குனி 01 செவ்வாய்க்கிழமை (15.03.2011) பக்கங்கள் 12 ஓசை – 166

யாழ் நகரில் ஒரு வான்வழி நிலையம்

(C/490)

SPICE TRAVELS & TOURS (PVT) LTD

IATA



412, First Floor, Hospital Road, Jaffna.
(Adjoining Sangeetha Mobile Links)

Fly Line
Keethan - 0773 916 416
Tharshy - 0773 915 530



## மூன்று அணு உலைகளில் வெடிப்பு; பாதிப்பை தடுக்கத் துடிக்கும் ஜப்பான்

### இலட்சக்கணக்கில் மக்கள் இடப்பெயர்வு


(கொழும்பு)

ஜப்பானின் முக்கிய அணுசக்தி மையமான புகுஷிமாவின் மூன்றாவது அணு உலையில் நேற்றுப் பிற்பகல் ஏற்பட்ட வெடிப்புக் காரணமாக 19 பேர் படுகாயமடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வெடிப்புக் காரணமாக மணித்தியாலத்துக்கு 20 கிலோ மீற்றர் வேகத்தில் அணுக்கதிர் வீச்சுகள் பரவும் வாய்ப்பு உள்ளதால் மக்கள் அவ்விடத்தில் இருந்து விரைவாக வெளியேற வேண்டும் என ஜப்பான் அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஜப்பானில் ஏற்பட் நிலநடுக்கம் மற்றும் சுனாமி ஆழிப்பேரலை காரணமாக ஜப்பானின் 11 அணு உலைகளும் பெரும் ஆபத்தில் சிக்கியுள்ளன. இவற்றால் எந்த அச்சுறுத்தலும் இல்லை என்று சர்வதேச அணுசக்தி கழகம் (11 ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.நா. நிபுணர் குழு விதப்புரைகள் பாதுகாப்புச் சபையில் ஆராய்வு



(ஜெனிவா)

**ஐக்கிய நாடுகள் சபைச் செயலாளர் நாயகம் பான் கீ மூனுக்கு இலங்கை விவகாரங்கள் தொடர்பாக ஆலோசனை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் இறுதி அறிக்கை தொடர்பாக ஐ.நா. பாதுகாப்புச் சபை உறுப்பினர்களுடன் விரிவாக ஆராயப்படவுள்ளது.**

புலிகளுடனான இறுதிக்கட்ட யுத்தத்தின்போது இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஆலோசனை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட மேற்படி நிபுணர் குழு, தனது பணிகளை நிறைவுசெய்துள்ளது. இக்குழுவினால் தயாரிக்கப்பட்ட இறுதி அறிக்கை இம்மாத இறுதியில் அல்லது அடுத்த மாதத்தின் முதல் வாரத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் (12 ஆம் பக்கம் பார்க்க)

அவுஸ்திரேலிய தலைநகர் சிட்னியில்

## இந்திய மாணவி கொலை; இலங்கை இளைஞர் கைது



(சிட்னி)

இந்திய மாணவியொருவரை வல்லுறவுக்குட்படுத்தி கொலை செய்த குற்றச்சாட்டில் இலங்கையைச் சேர்ந்த இளைஞர் ஒருவரை அவுஸ்திரேலிய பொலிஸார் கைதுசெய்துள்ளனர். (12 ஆம் பக்கம் பார்க்க)

## தொழில் முயற்சி முகாமையாளர்களுக்கு நியமனங்களை அமைச்சர் டக்ளஸ் வழங்கினார்



(யாழ்ப்பாணம்)

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சுக்குக் கீழான கைதொழில் அபிவிருத்திச் சபையினது செயல் திட்டங்களை வடக்கு-கிழக்குப் பகுதிகளில் விரிவாக்கம் செய்யும் பொருட்டு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் புதிதாக தொழில் முயற்சி மேம்பாட்டு முகாமையாளர்களுக்கு நியமனங்களை வழங்கியுள்ளார்.

அமைச்சர் அவர்களின் கொழும்பு அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றிலேயே (11 ஆம் பக்கம் பார்க்க)

## தொடரும் இந்திய மீனவர்களின் அத்துமீறல்; இந்தியத் தூதுவருடன் நாளை முக்கிய பேச்சு

### மீனவர் சங்கப் பிரதிநிதிகள் கொழும்பு விரைவு

(யாழ்ப்பாணம்)

வடபகுதிக் கடலில் இந்திய மீனவர்கள் அத்துமீறி இழுவைப் படகுகளில் தொழிலில் ஈடுபடுவது சம்பந்தமாகவும் இலங்கை மீனவர்களின் கடற்தொழில் தொடர்பான பிரச்சினைகள் சம்பந்தமாகவும் இந்தியத் தூதுவருடன் முக்கியமான பேச்சுவார்த்தை நாளை நடைபெறவுள்ளது.

இப்பேச்சுவார்த்தையில் வட மாகாணத்தைச் சேர்ந்த யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களின் கடற்தொழில் (11 ஆம் பக்கம் பார்க்க)

## யுத்த அனுபவப் பகிர்வு மாநாடு; அமெரிக்காவும் ஜப்பானும் புறக்கணிப்பு

(கொழும்பு)

இறுதிக்கட்ட யுத்தத்தில் புலிகளை வெற்றிகொண்டதன் இரகசியம் என்ன என்பதை உலகுக்கு அறிவிக்கும் வகையிலும் யுத்த அனுபவங்களை உலக நாடுகளுடன் பகிர்ந்துகொள்ளும் வகையிலும் அரசு நடத்தவிருக்கும் கருத்தரங்கை அமெரிக்கா மற்றும் ஜப்பான் உட்பட மேலும் சில நாடுகள் புறக்கணிக்கவுள்ளன. (12 ஆம் பக்கம் பார்க்க)

## யுத்த ஆயுதங்கள் கொள்வனவு; இந்தியா இப்போது முன்னணியில்

### சுவீடன் சமாதான ஆய்வு மையம் தகவல்

(புதுடில்லி)

அண்மைய வருடங்களில் யுத்த ஆயுதங்களை அதிகளவில் இறக்குமதி செய்யும் நாடுகளின் வரிசையில் இந்தியா முன்னணியில் திகழ்வதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

சுவீடனை மையமாகக் கொண்டு இயங்கி வரும் ஸ்டொக்கம் சர்வதேச சமாதான ஆய்வு நிறுவகத்தினால் மேற்கொள்ளப்பட்ட (12 ஆம் பக்கம் பார்க்க)

# தடம்மாறும் இலங்கை இராணுவம்; மக்கள் சேவையில் அதிக நாட்டம்

### நகர்ப்புற வளர்ச்சி இப்போது கைமாறுகிறது

(கொழும்பு)

யுத்தத்துக்குப் பிந்திய இலங்கையில் பொதுமக்களுக்கான சிவில் சேவைகளை வழங்குவதற்கு இலங்கை இராணுவத்தினர் முன்வந்துள்ளனர். இதன் ஒரு கட்டமாக உலகளாவிய விமானப் பயணங்களுக்கான பயணச் சீட்டுக்களை வழங்கும் சுற்றுலா நிறுவனம் ஒன்றை இலங்கை இராணுவம் ஆரம்பித்துள்ளது.

புலிகளைத் தோற்கடித்து சுமார் இரண்டாண்டுகளுக்குப் பின்னர், இராணுவம் இத்தகைய புதிய துறைகளில், அதுவும் சிவில் சமூகம் ஈடுபடும் துறைகளில் பங்கேற்க ஆரம்பித்திருக்கிறது.

இலங்கை இராணுவ அதிகாரிகளில் பலர் (11 ஆம் பக்கம் பார்க்க)

# கிடைக்கின்ற உதவிகளை நாம் அபிவிருத்திக்காக வழங்குகிறோம்

## ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர்கள் பேச்சு



(யாழ்ப்பாணம்)

மக்களுக்கு கிடைக்கின்ற வாழ்வாதார உதவிகளை உரிய முறையில் பயன்படுத்தி அதிலிருந்து உச்ச பயனைப் பெற வேண்டும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் அவர்கள் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு வாழ்வாதார உபகரணங்களை வழங்கும் நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்; வறுமை கோட்டின் கீழ் உள்ள மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில் எமது கட்சியும், அதன் செயலாளர் நாயகமுமான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். அந்த வகையில் நானும் எனது கட்சியின் சக நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) அவர்களும் இணைந்து இந்த உபகரணங்களை வழங்கியுள்ளோம். இதேபோன்று எதிர்காலத்திலும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் பல்வேறு உதவிகளை வழங்க உள்ளோம் எனவும் தெரிவித்தார்.

தொடர்ந்து ஈ.பி.டி.பி.யின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) உரையாற்றுகையில்,நாம் எமக்குக் கிடைக்கின்ற உதவிகளைக் கொண்டு பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதற்கான உதவிகளை வழங்கி வருகின்றோம். எனவே இவற்றை சரியான வழியில் பயன்படுத்தி கிராமங்களை முன்னேற்றப்பாதையில் கொண்டு செல்ல வேண்டும் எனத் தெரிவித்தார்.

நாங்கள் கடந்த காலங்களில் அனுபவித்த துன்பங்கள், துயரங்கள் உங்களுக்குத் தெரியும். எனவே எமக்கு தற்போது கிடைக்கின்ற நிதிகளைக்கொண்டு இவ் உபகரணத் தொகுதிகளை வழங்கி வருகின்றோம். இந்த உபகரணங்களைக் கொண்டு எவ்வாறு கிராமத்தை முன்னேற்றுகின்றீர்கள் என்பதைப் பொறுத்தே எதிர்காலத்தில் பல உதவிகளைச் செய்யவுள்ளோம்.

வன்னிப் பிராந்தியத்திலுள்ள மக்களும் அனைத்தையும் இழந்து நிர்க்கதிக்குள்ளாகியுள்ளனர். அம்மக்களுக்கும் பல உதவிகளைச் செய்யவுள்ளோம். எனவே எமக்குக் கிடைக்கின்ற சந்தர்ப்பங்களை சரியாகப் பயனபடுத்தி எங்களுடன் இணைந்து செயற்படுவதனூடாக உங்களுடைய கிராமம் மேலும் வளம் பெறும் எனத்தெரிவித்தார்.

வசந்தபுரம், பாசையூர், கொழும்புத்துறை, கற்குளம், குருநகர் கிழக்கு, நெடுக்குளம் ஆகிய மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு தலா 40,000 ரூபா பெறுமதியான வாழ்வாதார உபகரண தொகுதிகள் வழங்கப்பட்டன. இதில் தையல் இயந்திரங்கள், கயிறுகள் பின்னும் தறி மற்றும் அலுவலக



தளபாடங்கள் என்பன உள்ளடங்கி இருந்தன.

இதனைவிட வண்ணார் பண்ணை சிவன் விளையாட்டுக் கழகத்திற்கு விளையாட்டு உபகரணங்கள் சீருடைகள் அவர்களால் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வில் யாழ்ப்பாண பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம், யாழ். மாநகர சபை பிரதி முதல்வர் துரைராஜா இளங்கோ (றீகன்), பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் சிவச்சந்திரன், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சுனேத்ரா மற்றும் மாதர் கிராம அபிவிருததிச் சங்கங்களின் சமாசப் பிரதிநிதிகள்,மாதர் கிராமஅபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டனர்.(69)


## சிறு விளம்பரம்

### வீடு வாடகைக்குத்தேவை

3 அங்கத்தவர் கொண்ட கௌரவமான குடும்பத்திற்கு யாழ். மாநகரசபை எல்லையில் இருந்து 5 Kmக்கு இடையில் வீடு வாடகைக்குத்தேவை. ஆனைக்கோட்டை, கொக்குவில், தாவடி விரும்பத்தக்கது. தொடர்புக்கு:- 0778379298 (C/509)

### தவறிவிட்டது

உரும்பிராயைச் சேர்ந்த சிவகுமாரன் எசந்தன் என்பவரது தே. அடையாள அட்டை (932413353 V) திருநெல்வேலிக்கும் உரும்பிராய்க்கும் இடையில் பலாலிவீதியில் தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் உரும்பிராய் உபதபாலகத்தில் ஒப்படைத்து உதவவும். (C/611)


## புதிய கட்டட திறப்பு விழா

(சாவகச்சேரி)

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட யா/மறவன்புலோ சகல கலா வல்லி வித்தியாலய கட்டடங்களை உத்தியோக பூர்வமாக திறந்து வைக்கும் வைபவம் இன்று காலை நடைபெறவுள்ளது. இக்கட்டடங்களை திறந்து வைப்பதற்காக சுவிஸ் நாட்டின் இலங்கைக்கான தூதுவர் திரு. தோமஸ்லிஸ்ரர் வருகைதருகின்றார். அத்துடன் இந்நிகழ்விற்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள், கல்வி, அரசியல், அரச பிரமுகர்கள் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.






## கடுகதிவேகத்தில் பஸ்போக்குவரத்து; பயணிகளின் பாதுகாப்புக்கு யார் பொறுப்பு?

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வருகைதரும் சில தனியார் பேருந்துகள் அரச பேருந்துகளை முந்திச்செல்வதற்காக அசுரவேகத்தில் பயணிப்பதாகவும் இதனால் மக்கள் யாழ். வரும்வரை பீதியில் உறைந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் கூட தனியார்பஸ்சொன்று அரச பேருந்தைக் கலைத்துச் சென்று முந்தும் தறுவாயில் பேருந்து விபத்துக்குள்ளாகும் நிலையிலிருந்து மயிரிழையில் தப்பியதாகவும், அப்போது அந்த பேருந்தில் பயணஞ்செய்தவர்கள் அலறியடித்ததாகவும் தெரியவருகின்றது.

இவ்வாறு தனியார் பேருந்து ஓட்டுனர்கள் சிலரினால், தனியார் பேருந்தில் ஏறிப் பயணஞ்செய்ய அச்சமாக உள்ளதாகவும், உரிய அதிகாரிகள் இதற்கான தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என பயணிகள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

அதேவேளை விடிகாலைப்பொழுதினில் பயணிக்கும் பேருந்துகளின் வேகத்தினால் அவ்வீதியில் பயணிக்கும் பயணிகள் பலர் விபத்துக்குள்ளாகும் சூழ்நிலை ஏற்படக்கூடியதாக தெரியவருகிறது.

குறிப்பாக கொழும்பு மற்றும் வவுனியாவில் இருந்தும், வேறுதூர இடங்களில் இருந்தும் புறப்படும் பேருந்துகளே தங்கள் வேகக்கட்டுப்பாட்டை மீறிச் செல்வதாக மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

குறிப்பிட்ட பேருந்துகளின் ஓட்டுனர்கள் தூக்க நிலையில் இருந்தவாறு, பேருந்துகளை ஓட்டுவதாகவும், சாலைவளைவுகளில் வேகத்தைக் கட்டுப்படுத்தாமலே செலுத்துவதாகவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.தற்போது பனிமூட்டம் நிறைந்த காலமாதலால் சாலைவெளிகளில் உருவம் தெரியாத நிலையிலும் பேருந்துகள் வேகக்கட்டுப்பாட்டை மீறிச்செல்வதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

அண்மையில் கூட ஏ-9 பாதையில் செம்மணிக்கருகாமையில் யாழ். நோக்கி வேகமாக வந்த ஒரு பேருந்து சாலையில் ஒரு ஆட்டை மோதியதில் ஆடுஇறந்து போனதாக மக்கள் தெரிவித்துள்ளதோடு, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் காலைவேளைகளில் இப்படியாக வேகமாகப் பேருந்துகளை ஓட்டுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கமாட்டார்களா என்று அங்கலாய்ப்பதையும் காணக்கூடியதாக இருக்கிறது.(அ-ப,மி)

## மோட்டார் சைக்கிள் பதிவு

(யாழ்ப்பாணம்)

50சிசிக்கு உட்பட்ட அனைத்துவகையான மோட்டார் சைக்கிள்களையும் பதிவுசெய்யும் நடவடிக்கைகளை 31.09.2011ஆம் திகதிக்கு முன்னர் முடிவுறுத்துமாறு கொழும்பு மோட்டார் போக்குவரத்துத்திணைக்கள ஆணையாளர் நாயகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளமையால், யாழ். மாவட்டத்தில் இதுவரை 50சிசி க்கு உட்பட்ட மோட்டர் சைக்கிள்களை பதிவு செய்யாதுள்ளவர்கள் 31.09.2011 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொண்டு அவை தொடர்பான ஆவணங்களை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். பதிவு தொடர்பான விபரங்கள் கொழும்பு மோட்டார் போக்குவரத்துத்திணைக்கள ஆணையாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு அனுப்பிவைக்க வேண்டியிருப்பதால் இறுதிவரை காலதாமதம் செய்யாமல் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்வதுடன், காலதாமதம் செய்வதால் தண்டப்பணங்களைச் செலுத்தவேண்டிய தேவை ஏற்படும் என்பதை யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் அறியத்தருகின்றார்.

தூய்மை, பொறுமை, விடாமுயற்சி ஆகிய மூன்றும் வெற்றிக்கு மிகவும் இன்றியமையாதவையாகும். ஆனால் இவை அனைத்திற்கும் மேலாக அன்பு இருக்க வேண்டும்.

- விவேகானந்தர் -

தினப்பதிப்பு தினமுரசு THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@ live.com
thinamurasupaper@hotmail.com

## பாடம் புகட்டுவார்கள்

உள்ளூராட்சித் தேர்தலுக்கு இன்னமும் இரண்டு தினங்கள் உள்ளநிலையில், தேர்தல் ஆணையத்தின் அறிவிப்பை அடுத்து அரசியல் கட்சிகள் யாவும் நேற்று நள்ளிரவுடன் தத்தமது தேர்தல் பிரசாரங்களை முடித்துக்கொண்டன.

301 உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தேர்தல் நடைபெறுமென தேர்தல் ஆணையாளரால் அறிவிக்கப்பட்டிருந்த போதும், தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்களில் 66 மனுக்கள் நிராகரிக்கப்பட்ட நிலையில், 235 மன்றங்களுக்கு மட்டுமே தேர்தல் நடைபெறவுள்ளது.

இருபது வருடங்களுக்குப் பின் வடக்கு-கிழக்கில் தேர்தல் நடைபெறவிருந்த நிலையில், வடக்கே வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்ட உள்ளூராட்சிமன்றங்களுக்கு மட்டுமே தேர்தல் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள 19 உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிடுவதற்கென ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சமர்ப்பித்திருந்த வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமை, நீதிமன்றம் வரை சென்றதையடுத்து அவற்றுக்கான தேர்தலை நீதிமன்றம் இடைநிறுத்தியுள்ளது.

இந்தநிலையில், அரசிடம் இருந்து கௌரவமான தீர்வொன்றைத் தமிழ்மக்களுக்குப் பெற்றுக்கொடுப்பதற்கான முயற்சியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஈடுபட்டுள்ளதாகவும், மக்கள் ஒன்றிணைந்து தமிழரசுக் கட்சியையும், தேசியக் கூட்டமைப்பையும் ஆதரிக்க வேண்டும் என்றும் நா கூசாமல் சென்னையில் இருந்தவாறு கூட்டமைப்பின் தலைவர் அறிக்கை விட்டிருப்பதை நினைக்கும் போது அழுவதா? சிரிப்பதா? என்று தெரியவில்லை.

இந்த அறிக்கையைப் படித்த அன்பர் ஒருவர் தொலைபேசியில் "இவர்களிடம் மேலோங்கி இருப்பது சுயநலமா? மக்கள் நலமா?" என்ற நிலையில் பட்டிமன்றம் ஒன்றை ஒழுங்கு செய்வீர்களா என்று நகைச்சுவையாகக் கேட்டிருந்தார். அந்த அன்பர் கேட்டதிலும் ஓர் உண்மை இருக்கத்தான் செய்கிறது.

புலிகளால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு-அவர்களின் தோல்விக்குப் பின்னர் அந்தக் கூட்டை உடைத்த சம்பந்தன், சர்வதேசத்திற்கு தமிழ்மக்களின் ஒற்றுமையை மீண்டும் எடுத்துக்காட்ட கூட்டமைப்புப் போர்வைக்குள், தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் கேட்பவர்களை ஆதரியுங்கள் என்று கூறியிருக்கின்கிறார்.

அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவதாகக் கூறிக்கொள்ளும் இவர்கள், ஏனைய தமிழ்க் கட்சிகள் பிரச்சினை குறித்து தீர்வுத்திட்டத்தை அரசுக்கு சமர்ப்பித்துள்ள நிலையில், இவர்கள் எத்தகைய தீர்வின் அடிப்படையில் பேச முற்பட்டுள்ளார்கள் என்பது புரியாத புதிராகவே உள்ளது.

சர்வதேசத்தை நம்பி கடந்த முப்பது ஆண்டுகளாக அரசியல் நடாத்திய இவர்கள், அவர்கள் மூலம் எதனைச் சாதித்திருக்கிறார்கள் என்று மக்களிடம் கேட்டால், தமிழ்ப்பிரதேசங்களில் ஏற்பட்ட உயிரிழப்புக்கள், சொத்தழிவுகளே அவர்களின் சாதனை என்று துணிந்து கூறுவார்கள் என்பதுவே உண்மை.

இருபத்தியிரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருந்த வேளையில், பேரம் பேசக்கூடிய சக்தியாக இருந்தும் சொந்த மூளையில் செயற்படாது, இரவல் மூளையில் செயற்பட்ட இவர்கள், 14 பேருடன் இருந்து கொண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வெற்றி பெற்று சர்வதேசத்தின் மூலம் எதனைச் சாதிக்கப் போகிறார்கள் என்ற கேள்வி எழச்செய்கிறது.

அன்றாடம் எவ்வளவோ பிரச்சினைகளை எதிர்நோக்கிவரும் அப்பாவி மக்களின் நலன்களில் அக்கறை காட்டாது, நேர்மையற்ற முறையில் சுயலாபம் தேடும் இவர்களிடம் இருந்து மக்கள் எதனை எதிர்பார்க்க முடியும்?

அவலத்தையும், ஏமாற்றத்தையுமே இவர்களால் எமக்கு அளிக்க முடியும் என்பதை நன்குணர்ந்த வடக்கு-கிழக்கு மக்கள், நாளை மறுதினம் நடைபெறவுள்ள தேர்தலில் தமது வாக்குப் பலத்தின் மூலம் பாடம் புகட்டியே தீருவார்கள்.

- ஆசிரியர்.

# இலங்கைக்கு எதிராக சர்வதேசம் நடவடிக்கை எடுப்பதில் சிக்கல்

## என்கிறது லக்பிம

இலங்கையின் உள்நாட்டில் லிபியாவைப் போன்று ஒரு மக்கள் போராட்டம் ஏற்படும் என்று எந்த ஒரு அரசியல் விமர்சகரும் தெரிவிக்கவில்லை என லக்பிம செய்தித்தாள் தமது ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

திரிபோலியில் கடா பிக்கு எதிராக இடம்பெறுவ தைப் போன்று இலங்கையில் மக்கள் ஒன்று திரண்டு ஆர்ப்பாட்டத்தை மேற்கொள்ள எதிர்க்கட்சிகளுக்கு திறனில்லை என்றும் லக்பிம குறிப்பிட்டுள்ளது. மூவாயிரம் பொதுமக்கள் ஒன்றுகூடி ஆர்பபாட்டம் செய்தால் அதனை 10 லட்சம் மக்கள் எனக்கூறும் முறையே இலங்கையில் உள்ளது.

இலங்கையில் கடந்த பல வருடங்களாக அரசாங்கம் தேர்தல்களில் வெற்றிகளைப் பெற்றிருந்தது. இந்நிலையில் ஜே.வி.பி கூறுவதைப் போல கடாபிக்கு எதிரான போராட்டத்தை போன்று இலங்கையிலும் போராட்டம் இடம்பெறும் என்பதை நிரூபிப்பதற்கு இது நல்ல சந்தர்ப்பமாகும். உள்ளூராட்சித் தேர்தல்கள் எதிர்வரும் 17 ஆம் திகதி இடம பெறுகின்றன. இதன் போது கடாபிக்கு எதிரான போராட்டத்தைப் போன்று போராட்டம் ஒன்றை சிந்திக்கும் மக்கள், தமது வாக்குகள் மூலம் அதனை மேற்கொள்ள முடியும் என ஜே.வி.பி கூறியுள்ளமையை லக்பிம சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை போர்க்குற்றச்சாட்டு தொடர்பில் இலங்கைக்கு எதிராக சர்வதேச நாடுகளும் அமைப் புக்களும் நடவடிக்கைகளை எடுக்க முயற்சித்து வருகின்றன. எனினும், இலங்கையைப் பொறுத்தவரை அதன் தோழமை நாடுகளின் உதவி யுடன் இந்த நடவடிக்கைகளில் இருந்து மீண்டு கொள்ள வழி உள்ளது. அமெரிக்கா, அவுஸ்ரே லியா மற்றும் பான் கீ மூனின் சிறிய நிபுணர் குழு என்பன இலங்கைக்கு எதிராக இன்று பல்வேறு முனைப்புகளை மேற்கொண்டு வருகின்றன. இருப்பினும் இந்த அமைப்புக்களும் நாடுகளும் இலகுவாகத் தமது காரியங்களை நிறைவேற்ற முடியாது என்றும் லக்பிம ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஐ.நாவில் அமைச்சர் சமரசிங்கவின் உரை வழமையான பிரசாரப்பாணியென வர்ணிப்பு



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 16 ஆவது கூட்டத் தொடரில் பெருந்தோட்டத்துறை அமைச்சர் மகிந்த சமரசிங்க ஆற்றிய உரை, இலங்கை அரசாங்க தரப்பின வழமையான பிரசார உரையாகவே பல்வேறு மேற்குலக நாடுகளால் பார்க்கப்பட்டது. அவருடைய உரையில் வெளிப்பட்ட ஓட்டைகள் பலவேறு அரசசார் பற்ற நிறுவனங்களால் சுட்டிக் காட்டப் பட்டதோடு, அவற்றை அவர் ஏற்றுககொள்ள வேண்டிய இக்கட்டான நிலைக்கும் தள்ளப்பட்டதாக ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மனித உரிமை நிலைமைகள் தொடாபாகக் கருத்துரைத்த மனித உரிமை அமைப்புக்கள் பல்வேறு கருத்து நிலைப்பட்ட பிரச்சினைகளை எடுத்துரைத்தன.

அனைத்துலக மன்னிப்புச் சபை, அனைத்துவகை இனத்துவேசத்திற்கும் எதிரான அனைத்துலக மையம், மனித உரிமைகளுக்கான ஆசிய மையம் உட்பட்ட பல்வேறு அனைததுலக மனித உரிமை அமைப்புக்கள் இலங்கை விவகாரம் தொடர்பான விவாதத்தில் பங்கேற்றன.

இம்முறை இலங்கை தொடர்பான பல தீர்மானங்கள் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்படுமென நம்பப்படுவதோடு, எதிர்வரும் ஜூன் மாதம் நடைபெறவுள்ள கூட்டத்தொடர், இலங்கைக்கு சிக்கலானதாக இருக்குமென்றும் வலுவாக நம்பப்படுகிறது.

## ஓமந்தை புகையிரத நிலையம் 26ஆம் திகதி திறக்கப்படும்

(வவுனியா)

ஓமந்தை புகையிரத நிலையம் எதிர்வரும் 26ஆம் திகதி சனிக்கிழமை திறந்து வைக்கப்படவிருபபதாகத தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 13 மில்லியன் ரூபா செலவில் புதிய புகையிரத நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் வவுனியாவில் இருந்து பிற்பகல் 3.30 மணிக்குக் கொழும்புக்குப் புறப்பட்ட யாழ் தேவி புகையிரதம், 26 ஆம் திகதியிலிருந்து ஒரு மணித்தியாலம் முன்பாக பிற்பகல் 2.30 மணிக்கும் புறப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, வடபகுதிக்கான சகல புகையிரத சேவைகளும் ஓமந்தைவரை நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலம் இச் சேவை தாண்டிக்குளம் வரை மட்டுமே நடை பெற்றுவந்தமை குறிப்பிடத்தக்கது. (39)

# பல்வேறு வழிகளிலும் உதவிய ஜப்பானுக்கு இலங்கை உடனடியாக உதவத் தவறிவிட்டது

## குற்றம் சாட்டுகிறது ஐ.தே.க

(கொழும்பு)

எமது நாட்டிற்கு பல்வேறு வழிகளில் உதவிகளை வழங்கிவரும் ஜப்பான் பாரிய இயற்கை அனர்த்தத்தை எதிர்கொண்டுள்ளது. ஏனைய நாடுகள் ஜப்பானில் இயற்கை அனர்த்தம் ஏற்பட்ட பின் நிவாரணப் பொருடகளையும் மீட்பு பணிகளுக்கான குழுக்களையும் அனுப்புவதற்கு முன்வந்தன. ஆனால் இலங்கை அரசாங்கம் உடனடியாக உதவியை வழங்கத தவறியுள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக்க கூறினார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்:

இலங்கையில் கடந்த 2004 ஆம் ஆண்டு சுனாமி ஏற்பட்டபோது உடனடியாக ஜப்பான் அரசு பண உதவி, உணவு எனப்பல நிவாரணங்களை வழங்கியது. இதனை நாம் மறந்து விடமுடியாது.

நட்பு மிக்க நாடான ஜப்பானில் எமது இலங்கையர்கள் பலர் வாழ்கின்றார்கள் ஜப்பானில் சேவை செய்கின்றார்கள்.

இலங்கை அரசாங்கம் வெளிநாடுகளில் சென்று எமது அரசை பெருமை மிக்கதாக காட்டிக் கொள்வதற்கு மட்டுமே முயல்கின்றது. நாட்டின் எதிர்க கட்சி உறுப்பினர் என்ற நிலையில் இதற்கு நாங்கள் வருந்துகிறோம் என்றார்.

அதேவேளை, கடந்த காலத்தில் இலங்கையில் காணப்பட்ட யுத்தத்தால் நாடு பெரும் பின்னடைவை அடைந்தது. அரசாங்கமும் இலங்கையில் ஈட்டிய வருமானத்தில் பாதியை யுத்தத்திற்காகச் செலவழிப்பதாக காரணங்களைக் கூறியது. இன்று யுத்தம் முடிவுக்கு வந்துள்ள நிலையில் இன்னும் பொருளாதார ரீதியில் மக்கள் பின்னடைவையே சந்திக்கின்றனர்.

யுத்தத்தை வெற்றிகொண்ட தலைவராக சரத்பொன்சேகா அன்று பாராட்டப்பட்டார். இராணுவ வ்ரார்களும் போற்றப்பட்டார்கள். ஆனால இன்று அவர்களுக்கு இலஙகையில் கொடுக்கும் கௌரவம் என்ன? நாட்டைப் பாதுகாக்கும் வீரர்கள் இன்று காய்கறிகளை சந்திக்கு சந்தி விற்கின்றனர். யுத்தத்தை வென றெடுத்த தலைவர் யுத்தம் முடிந்து 20 மாதத்திற்குள் சிறைக்குள் தள்ளப்பட்டுள்ளார்.

இன்று யுத்தம் முடிந்துள்ளது. யுத்தத்திற்காக செலவழிக்கப்பட்ட பொருளாதார நிதி மீதமாகியுள்ளது. ஆனால் அப்போதிருந்த நிலையே இன்னும் நீடிக்கிறது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அமைச்சரவையை 35 வீதமாக குறையபதாகவும் அரசாங்க ஊழியாகளுக்கு 2500 ரூபா சம்பள அதிகரிப்பு வழங்குவதாகவும் பொருட்களின் விலை உயர்வைக் குறைப்பதாகவும் பல வாக்குறுதிகள் வழங்கப்பட்டிருந்தன. ஆனால் அவை இன்னும் நிறைவேற்றப்படவில்லை எனவும் அவர் கூறினார்.

அத்துடன் ஐ.தே வின் மறுசீரமைப்புத் திட்டங்கள் ஏப்ரல் 12 ஆம் திகதி அமுல்படுத்தப்படும் எனவும் அவர் கூறினார்.

# கைதடியில் தொலைபேசி பரிவர்த்தனை நிலையம் அமைக்கப்படவுள்ளது

## ரெலிகொம் வட்டாரம் தகவல்

(கைதடி)

யாழ்.மாவட்டத்தில் கேபிள் தொலைபேசி இணைப்பு வழங்கப்படாத பிரதேசங்களுக்கு அவற்றை வழங்கும் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

சித்தன்கேணியில் உள்ள பரிவர்த்தனை நிலையத்தில் இருந்து வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய் போன்ற பகுதிகளுக்கு இந்தக் கேபிள் தொலைபேசி இணைப்புக்கள் விநியோகிக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

அதேசமயம், சாவகச்சேரி பரிவர்த்தனையில் இருந்து மீசாலை, நுணாவில் பகுதிகளுக்கும் இந்தக் கேபிள் இணைப்புக்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

கோப்பாய் பரிவர்த்தனையில் இருந்து தற்போது கைதடி, உரும்பிராய் வீதிக்கான இணைபபுக்கள் வழங்குவதற்கான கேபிள இணைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

அதேசமயம் கைதடிப் பகுதியில் பரிவர்த்தனை நிலையம் ஒன்றும் விரைவில் அமைக்கப்பட்டு அதன் ஊடாக இப்பிரதேசத்திற்கும் கேபிள் இணைப்புக்களை விநியோகிக்கவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக ரெலிகொம் வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்.மாவட்டத்தில் இந்த ஆண்டில் கூடுதலான கேபிள் தொலைபேசி இணைப்புக்களை மக்களுக்கு வழங்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளபட்டுள்ளதென அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (25)

# கச்சதீவு அந்தோனியார் ஆலய உற்சவத்திற்கான ஏற்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்தப் பெருவிழா எதிர்வரும் 19ஆம் திகதி ஆரம்பமாகி மறுநாள் 20ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளது.

இதில் 19ஆம் திகதி நெடுந்தீவுப் பங்குத்தந்தையின் தலைமையில் நற்கருணை ஆராதனையும், மறுநாள் காலை யாழ்.மறைமாவட்ட குருமுதல்வர் அருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் தலைமையில் திருவிழாத் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

யாழ்.அரச அதிபரும், யாழ். ஆயர் இல்லமும் இணைந்து இத்திருவிழாவிற்கான சகல ஏற்பாடுகளையும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்விழாவிற்கு பக்தர்கள் செல்வதற்கு கடற்படையினர் அனுமதி வழங்கியுள்ளதாகவும், 19ஆம் திகதி காலை சென்று மறுநாள் பிற்பகல் திரும்ப வேண்டும் என அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாலயத்திற்குச் செல்வோர் குருநகர், மண்கும்பான், குறிகாட்டுவான், நெடுந்தீவு ஆகிய இறங்கு துறைகளில் இருந்து செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இத்திருவிழாவிற்கு இந்தியாவிலிருந்து 3 ஆயிரம் யாத்திரிகர்களும் மற்றும் அருட்தந்தையர்களும் கலந்துகொள்ளவுளளதாகவும் யாழ்.ஆயர் இல்ல வட்டாரங்கள் தெரிவித்தன. (21)

# திருட்டுக்கள் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் மேற்குப் பகுதிகளில் அண்மைய நாட்களில் இரவு நேரத் திருட்டுக்கள் அதிகரித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத்திருட்டுக்கள் மின்சாரம் தடைப்படும் நேரங்களிலேயே நடைபெற்று வருவதாகவும், இதனால் தாம் அச்சத்துடனேயே இரவுப் பொழுதைக் கழித்து வருவதாகவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

நீர் இறைக்கும் மோட்டர்கள், ஓட்டோக்களிலும, வான்களிலும் பொருத்தப்பட்டுள்ள பற்றரிகள் மற்றும் இரண்டு சில்லு உழவு இயந்திர சில்லுகள் என்பனவே இவ்வாறு திருடப்பட்டுப் போன பொருட்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# நல்லூர் சிவன் ஆலய வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் சிவன் ஆலய வீதி தற்போது மிகவும் மோசமாகச் சேதமடைந்துள்ளதுடன் அவ் வீதியால் பெரும் சிரமத்தின் மத்தியில் போக்குவரத்து மேற்கொள்வதாகப் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குன்றும் குழியுமாகக் காணப்படும் இவ்வீதியால் தினமும் அதிகளவில் மக்கள் பிரயாணம் செய்வதால் அவர்கள் செல்லும் வாகனங்களும் சேதமடைவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக மழைகாலங்களின்போது மண் அரிக்கப்பட்டு கற்கள் வீதி முழுவதும் பரவிக்காணப்படுவதால் சைக்கிள் ரயர் காற்றுப் போகும் அவல நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பருத்தித்துறை வீதியில் பாலம் அமைக்கும் பணிகள் இடம்பெற்ற காலங்களிலும் இவ் வீதியூடாகவே அரச தனியார் பேருந்துச் சேவைகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இவ்வீதியில் யாழ். மாநகரசபை, சிவன் ஆலயம் மற்றும் பாடசாலை என்பன அமைந்துள்ளது.

இதனால் நாளாந்தம் பாடசாலை மாணவர்கள், ஆலயத்திற்குச் செல்வோர் மற்றும் உத்தியோகத்தர்கள், வர்த்தகர்கள் எனப்பலர் இவ்வீதியையே அதிகளவில் பயன்படுத்துகின்றனர்.

எனவே பொதுமக்களின் நலன்கருதி சம்பந்தப்பட்டவர்கள் இவ்வீதியைப் புனரமைப்புச் செய்துதருமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## நடப்பு வருட நிர்வாகிகள்

(யாழ்.நிருபர்)

நயினாதீவு நாகபூசணி அம்பாள் ஆலய வழிபடுவோர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம், வேலணைப் பிரதேச செயலர் மு.நந்தகோபன் தலைமையில் ஆலய மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பின்வருவோர் வழிபடுவோர் சங்க நடப்பு வருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் ஆ.தியாகராசா செயலாளர் -நயினாதீவு பிரதேச சபையின் பொறுப்பதிகாரி ந.மோகனரூபன், பொருளாளர் பொ.வாமதேவன் உட்பட 12 பேர் கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டுள்ளது. (10)

# ஆடு கொண்டு சென்றவருக்கு இரண்டாயிரம் ரூபா அபராதம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பிரதேசத்திலிருந்து வேறு இடத்திற்கு அனுமதிப்பத்திரம் இன்றி ஆடு கொண்டு சென்ற நபருக்குச் சாவகச்சேரி நீதிமன்றத்தினால் 2 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது-

இக்குற்றததிற்காகக் குறித்த நபரைப் பொலிஸார் கைது செய்து சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. கடந்த வெள்ளிக்கிழமை இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது வழக்கை விசாரித்த சாவகச்சேரி நீதிமன்ற நீதிபதி ம.கணேசராசா, மோட்டார் சைக்கிளில் ஆட்டைக் கொண்டு சென்ற நபருக்கு 2 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன் ஆட்டினை 10 ஆயிரம் ரூபா பிணையிலும், மோட்டார் சைக்கிளை 1 லட்சம் ரூபா பிணையிலும் கொண்டு செல்ல அனுமதி அளித்தார்.

இதேவேளை அனுமதிப்பத்திரம் பெற்றாலும் அதில் குறிப்பிடப்படும் விதிமுறைகளுக்கு முரணாக ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குக் கால்நடைகள், பறவைகள் என்பவற்றைக் கொண்டு செல்வோர் தண்டனைக்கு உள்ளாக்கப்படுவர்.

எனவே பொதுமக்கள் இதனைக் கவனத்தில் எடுத்துச் செயற்படுமாறு நீதிபதி அறிவுறுத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது. (11)

## வறிய மாணவர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன

(யாழ்ப்பாணம்)

யாழ்.மறைமாவட்ட புனித வின்சன் டி போல் சபையின் மத்தியசபை உறுப்பினர்கள் கிளிநொச்சிக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டு அங்கு வறிய மாணவர்களுக்கு உதவிகளை வழங்கியுள்ளனர்.

யாழ்.மரியன்னை பேராலயப் பங்குத்தந்தை அருட்தந்தை சகாயநாயகம் தலைமையில் சென்ற இவ் உறுப்பினர்கள் கிளிநொச்சி, தர்மபுரம், விசுவமடு ஆகிய இடங்களுக்கு விஜயம் செய்து அங்கு வறிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்குப் பாடசாலை உபகரணங்களை வழங்கியதுடன் தாய், தந்தையை இழந்த பிள்ளைகளுக்கு பண• உதவிகளையும் வழங்கியுள்ளனர். (21)

## ஆலயப் புனருத்தாரணம்

(வவுனியா)

ஏ-9 வீதிக்கு அருகாமையில் புளியங்குளத்தில் அமைந்துள்ள முத்துமாரி அம்மன் ஆலயத்தின் புனருத்தாரண திருப்பணி வேலைகள் நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யுத்தம் நிறைவடைந்து சமாதான சூழ்நிலை ஏற்பட்டுள்ள நிலையில் ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்து மகா கும்பாபிஷேகம் நடத்துவதற்கான ஏற்பாடுகளை ஆலய நிர்வாகத்தினர் மேற்கொண்டு வருகின்றனர். (39)

## உபவாச பிரார்த்தனை

(கொக்குவில்)

"எம் பட்டணத்தை கிறிஸ்துவுக்காய் கட்டுவோம்" என்னும் உபவாசப் பிரார்த்தனை எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும்.

யாழ்.இராசாவின் தோட்டம் தேவசபை மண்டபத்தில் முற்பகல் 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை பிரார்த்தனைகள் தொடருமென அறிவிக்கப்படுகிறது.

இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷ ஐக்கியத்துவமும், யாழ்.கிறிஸ்தவ சபைகள் மற்றும் ஸ்தாபனங்களின் ஐக்கியமும் இணைந்து ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ள தாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (68)

## ஏகாதசி விரதம் அனுஷ்டிப்பு

(கொக்குவில்)

நாகேஸ்வரம், அளவெட்டி மேற்கு ஸ்ரீநாகவரத நாராயண தேவஸ்தானத்தில் நாளை புதன் கிழமை ஏகாதசி விரத பூசை மிகச் சிறப்பாக நடைபெறவுள்ளது.

காலை 8 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளுடன் பூசைகள் ஆரம்பமாகும். 9மணிக்கு ஆன்மீகவுரை இடம்பெறும்.

முற்பகல் 10 மணிக்கு வசந்த மண்டபப் பூசையை அடுத்து நாராயண சுவாமி பூமாதேவி, ஸ்ரீதேவி சகிதராய் திருவீதி எழுந்தருள்வார்.

மதியம் 12 மணிக்கு அடியார்களுக்கான மகேஸ்வர பூசை இடம்பெறும். (68)



சுன்னாகம் வருஷப்புலம் மகாமாரி அம்பாள் அம்மன் ஆலயத் தேர்த் திருவிழா நிகழ்வில் அம்பாள் தேரில் ஆரோகணிப்பதையும், கவிஞர் துரையர் எழுதிய அம்மன் அர்ச்சனை பாமாலை வெளியீட்டு நிகழ்வின் தொடக்கவுரையை சி.சண்முகவடிவேல் நிகழ்த்துவதையும், அருகில் கணபதிப்பிள்ளை, பாமாலை ஆசிரியர் ஆகியோர் நிற்பதையும், ஆலய பிரதமகுரு க.சபாபதிக் குருக்கள் வெளியீட்டுரை வழங்குவதையும் காணலாம்.

# ஒழுக்கக்கேடான சம்பவங்கள் தொடர்ந்தால் பாடசாலையின் தரம் 5 இற்கு மாற்றப்படும்

## கோட்டக் கல்விப்பணிப்பாளர் எச்சரிக்கை

(யாழ்.நிருபர்)

ஒரு சில மாணவர்களின் செயற்பாடுகள் ஆசிரியர்களையும், பெறறோர்களையும் தலைகுனிய வைக்கின்றது. இந்தப் பாடசாலையில் மாணவர்களின் ஒழுக்கக்கேடான சம்பவங்கள் நடைபெற்றுள்ளன.

இத்தகைய சம்பவங்கள் தொடருமாயின், எதிர்காலத்தில் இப்பாடசாலை தரம் 5 இற்கு உடபட்ட பாடசாலையாக மாற்றப்பட்டு ஆயிரம் பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்படும் என நல்லூர்க் கோட்டக்கல்விப் பணிப்பாளர் சி.மாணிக்கராசா தெரிவித்தார்.

பெரியபுலம் மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பாடசாலை அதிபர் ஆ.விவேகானந்தன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

பல்வேறு இக்கட்டான நிலைகள் வரும்போது மாணவர்கள் தம்மைச் சுதாகரித்துக்கொண்டு ஒழுக்க சீலர்களாக விளங்க வேண்டும். பாடசாலைச் சமூகத்திற்கு அவப்பெயரைச் சம்பாதிக்கும் நோக்குடன் செயறபடக்கூடாது.

கடந்தகால அனுபவங்கள் எதிர்காலப் படிப்பினைக்கு வழிவகுக்க வேண்டும். ஒழுக்கத்தையும், பண்பாட்டையும் கற்றுக் கொள்ள விளையாட்டுப் போட்டிகள் உதவுகின்றன.

யாழ். மாவட்ட மக்கள் பல்வேறு இன்னல்களையும், துயரங்களையும் அனுபவித்து விட்டனர். இனி வருங்காலங்களிலாவது நீங்கள் நன்றாகச் சிந்தித்து யாருடைய கரங்களைப் பலப்படுத்தவேண்டுமோ அவர்களுடைய கரங்களைப் பலப்படுத்துங்கள்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பாடசாலைக்குத் தேவையான கட்டடங்கள், தளபாடங்களைப் பெற்றுத் தருவதோடு, தேசியமட்டப் போட்டிகளுக்கு மாணவர்களை அழைத்துச் செல்லல் மற்றும் கல்விச் சுற்றுலா போன்ற நிகழ்வுகளுக்கு முழுப் பணத்தையும் தந்து உதவுகிறார். அவருக்கு நன்றி தெரிவிப்பதாகவும் குறிப்பிட்டார். (10,மி)



யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினர் யாழ்.வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சண்.தயாளன் தேசியக் கொடியை ஏற்றிவைப்பதையும், பாடசாலை அதிபர் சு.தியாகலிங்கம் அருகில் நிற்பதையும் காணலாம். (10)

# க.பொ.த. உயர்தர முன்னோடிப் பரீட்சை

(யாழ்.நிருபர்)

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினரால் வருடந்தோறும் நடத்தப்படும் கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தர முன்னோடித் தேர்வு 2011 எதிர்வரும் 18 மற்றும் 21 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

18 ஆம் திகதி இந்து நாகரிகம், இந்து சமயம் ஆகிய பாடங்களும், 21 ஆம் திகதி தமிழ்மொழியும் நடைபெறவுள்ளதாகவும் விண்ணப்பித்த பரீட்சார்த்திகளுக்கு சுட்டெண் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் பரீட்சைச் செயலாளர் இரா. செல்வவடிவேல் தெரிவித்துள்ளார். (10)

# கோவில் வீதியில் மீண்டும் ஒளிரும் மின் விளக்குகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோவில் வீதிப் பகுதியில் ஒளிராது இருந்த மின் விளக்குகள் மீண்டும் ஒளிர ஆரம்பித்திருப்பதைக் காணமுடிகிறது.

பரதான வீதியிலிருந்து கோவில் வீதியில் ஆஸ்பத்திரி வீதிச்சந்திக்கும் இடையில் மின விளக்குகள் பொருத்தப்பட்டிருந்தபோது அவை ஒளிதர மறுத்ததையிட்டு, அப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டிருந்தனர்.

இந்நிலையில் தினமுரசு நாளிதழ் இவ்விடயம் தொடர்பாக யாழ். மாநகரசபையினரின் கவனத்துக்குக் கொண்டு வந்ததை அடுத்து அவர்கள் எடுத்துக்கொண்ட நட வடிக்கையின் பயனாக அவ் விளக்குகள் மீண்டும் ஒளிர ஆரம்பித்துள்ளதால் அப்பகுதி மக்கள் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளனர்.

இவ் வீதியிலுள்ள தேவாலயத்திற்கு மக்கள் வழிபாட்டுக்குச் செல்வதில் சிரமங்களையும், இரவு நேரங்களில் இடம்பெறும் கொள்ளைச் சம்பவங்களாலும் அச்சமுற்றிருந்த அப்பகுதி மக்களுக்கு மீண்டும் மின்னொளி கிடைத்திருப்பதனால் அவர்கள் திருப்தி அடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## ஆதினியின் இன்றைய பலன்

(15.03.2011 – செவ்வாய்க்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

விகிர்தி பங்குனி 01

இராகுகாலம் 3.21–4.51, சுபநேரம் 10.51–12.21,
தசமி மு.ப.10.37, புநர்பூசம் பி.ப.3.54,
சித்தம், உலக ஊனமுற்றோர் தினம்.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

**மேடம்:**– பொருள் வரவு, செய்தியால் மகிழ்ச்சி, சுபச்செலவு.

**ரிஷபம்:**– சினத்தால் கேடு, காரியத்தடை, அவமானப்படல்.

**மிதுனம் :**– நண்பர் சேர்க்கை, கொண்டாட்டம், விருந்துண்வு.

**கடகம்:**– பகைவர் நேசம், புதிய உறவு, தொழில் விருத்தி.

**சிம்மம்:**– தனச் சேர்க்கை, தாய்வழி உதவி, குடும்பத்தில் மகிழ்ச்சி.

**கன்னி :**– தேகாரோக்கியம், மகிழ்ச்சிப் பெருக்கு, நண்பர் உதவி.

**துலாம் :**– போட்டிகளில் வெற்றி, மதிக்கப்படல், ஆலய தரிசனம்.

**விருச்சிகம்:**– பாராட்டப்படல், பெரியோர் ஆசி, காரிய சித்தி.

**தனுசு:**– போட்டிகளில் வெற்றி, அந்நியர் உதவி, தொழிலால் லாபம்.

**மகரம்:**– தேவையில்லாத கற்பனை, விதண்டாவாதம், பகை அதிகரிப்பு.

**கும்பம் :**– களியாட்ட விருப்பு, பயணம், தொழில் விருத்தி.

**மீனம்:**– நண்பர் உதவி, முயற்சியில் வெற்றி, கலகலப்பு.

# சயரோக தினத்தையொட்டியதான புகைப்படப் போட்டியும் கண்காட்சியும்

(யாழ்ப்பாணம்)

உலக சயரோக தினத்தை முன்னிட்டு மார்ச் 24 ஆம் திகதி சுகாதார அமைச்சும் சயரோக கட்டுப்பாட்டு மற்றும் இதய நோய் தொடர்பான தேசிய வேலைத்திட்டமும் இணைந்து நாடளாவிய ரீதியில் புகைப்படப் போட்டி மற்றும் கண்காட்சியை நடத்தவுள்ளது.

இப்போட்டிகள் பாடசாலைப் பிரிவு, திறந்த பிரிவு என 2 பிரிவுகளாக நடத்தப்படவுள்ளன. இதில் புகைப்படங்கள் சயரோகத்தை ஒழிப்பதற்கான செயற்பாடுகளான சிகிசசை அளித்தல், சமூகத்தை அறிவூட்டுவதற்கான சுகாதார கல்வி வேலைத்திட்டம், சயரோகத்தை ஒழிப்பதற்கான மக்களது பங்களிப்பு, சயரோகம் பரவுவதைத் தடுக்கும் சந்தர்ப்பங்களில் அவதானத்தைச் செலுத்தி ஆக்கபூாவமான கருத்துக்களை வழஙகுதல் போன்ற விடயங்களைப் பிரதிபலிப்பதாக அமைதல் வேணடும். புகைப்படங்கள் சுயமாகத் தயாரிக்கப்பட்டவையாக இருத்தல் வேண்டும்.

பாடசாலை மாணவர்கள் புகைப்படத்தின் பின்புறத்தில் அடையாளத்தை உறுதிப்படுத்தும் முகமாக அதிபரின் கையொப்பம் மற்றும் பாடசாலை இலச்சினை பொறிககப்படவேண்டும்.

புகைப்படத்தின் நீளம் ஆகக குறைந்தது 12 அங்குலமாகவும் (30 செ.மீ), ஆகக்கூடியது 18 அங்குலமாகவும் (45 செ.மீ), அகலம் 10 அங்குலமாகவும் (25 செ.மீ) இருத்தல் வேணடும்.

புகைப்படங்களை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர், பணிப்பாளர், சயரோகம் மற்றும் இதயநோய் தொடர்பான தேசிய வேலைத் திட்டம் 555/5, அல்விட்டிகல மாவத்தை, நாரஹேன்பிட்டி, கொழும்பு -5 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# துர்நாற்றம் வீசும் கழிவுநீர் வாய்க்கால்

(பாஷையூர்)

பாஷையூரிலுள்ள குறுக்கு வீதிகள் அனைத்தும் பலத்த சேதமடைந்து காணப்படுகின்றன. இந்த வீதிகள் சேதமடைந்துள்ளதால் இவற்றால் போக்குவரத்துச் செய்யும் மக்கள் பெரும் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

அதனைவிட இந்தக் குறுக்கு வீதியோரமாக அமைந்துள்ள வடிகால்வாய்களும் சேதமுற்றுக் காணப்படுகின்றன.

இதனால் இந்தக் கழிவுநீர் வாய்க்கால்களிலிருந்து துர்நாற்றம் வீசுவதாகவும், பல தொற்றுநோய்கள் பரவும் அபாயத்தை மக்கள் எதிர்நோக்கியிருப்பதும் தெரியவருகின்றது. (25)



சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு யாழ். சமூக செயற்பாட்டு மையத்தால் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை மைதானத்தில் நடைபெற்ற பெண்களுக்கான தீப்பாசறை நிகழ்வினை யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தீ ஏற்றி ஆரம்பித்து வைப்பதையும் கலந்துகொண்ட பெண்களையம் காணலாம். (52)

# டோனியின் எண்ணம் பலிக்காது

(சிட்னி)

இந்த முறை உலகக் கிண்ணப் போட்டியில் வெற்றி பெற்றுக் கிண்ணத்தைக் கைப்பற்ற வேண்டும் என்ற டோனியின் எண்ணம் பலிக்காது என அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் டீன்ஜோன்ஸ் தெரிவித்துள்ளார்.

அவர் அளித்த பேட்டியில் கூறியதாவது: ஒரு அணி உலகக் கிண்ணத்தை வெல்ல வேண்டுமென்றால் அந்த அணியில் உள்ள 4 துடுப்பாட்ட வீரர்கள் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த வேண்டும். புதுப் பந்திலும், பவர் பிளேயிலும் அதிக ஓட்டங்களை விளாச வேண்டும்.

மேலும் திறமை வாய்ந்த 4 பந்து வீச்சாளர்கள் இருக்க வேண்டும். பவர் பிளேயிலும், நெருக்கடியான நேரங்களிலும் அவர்கள் அசத்த வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக களத்தடுப்பில் சிறப்பாக செயற்படவேண்டும்.



தற்போதுள்ள நிலையில் இந்திய அணி கிண்ணத்தை வெல்லும் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை. இப்படியே ஆடினால் கிண்ணத்தை வெல்ல வேண்டுமென்பது டோனி உள்ளிட்ட இந்திய வீரர்களின் கனவாகவே இருக்கும்.


சேவாக், சச்சின் ஜோடி எல்லா விதமான பந்து வீச்சுகளையும் சிதறடித்து ஓட்டங்களைக் குவிக்கும் திறமையுடன் உள்ளது. ஆனால் இதுமட்டுமே வெற்றிக்கு போதாது. சகீர்கான், நெஹ்ரா, சாவ்லா, ஹர்பஜன்சிங் ஆகியோரைக் கொண்ட பந்து வீச்சுக் கூட்டணி தரம் வாய்ந்ததாக இல்லை என்றார்.

# இந்திய அணியில் மாற்றம்?

(நாக்பூர்)

உலகக் கிண்ணப் போட்டித் தொடரின் இந்திய அணி கடைசி லீக் ஆட்டத்தில் மேற்கிந்தியத்தீவுகள் அணியை வருகிற 20ஆம் திகதி எதிர்கொள்கிறது. இந்த ஆட்டம் சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடக்கிறது. இந்தப் போட்டிக்காக இந்திய அணியில் சில மாற்றம் இருக்கலாம் என்று கூறப்படுகிறது. ஒரு துடுப்பாட்ட வீரர், ஒரு பந்து வீச்சாளர் மாற்றப்படலாம். சென்னை போட்டியில் இந்தியா இரண்டு வேகப்பந்து வீரர், 2 சுழற்பந்து வீரருடன் களம் இறக்கப்படலாம்.

இதனால் முனாப்பட்டேல் அல்லது நெக்ரா ஆகியோரில் ஒருவர் நீக்கப்பட்டு அவருக்குப் பதிலாக உள்ளூர் வீரரான அஸ்வின் இடம்பெறலாம். நெக்ராவே நீக்கப்பட வாய்ப்பு உள்ளது. துடுப்பாட்ட வீரர்களில் யூசுப் பதான், விராட்ஹோலி கடந்த 2 ஆட்டங்களில் சரியாக ஆடவில்லை. இதனால் இந்த இருவரில் ஒருவர் நீக்கப்படலாம். அது



யார் என்பது உறுதியாக தெரியவில்லை.

யூசுப் பதான் நீக்கப்பட வாய்ப்பு இருப்பதாக கூறப்படுகிறது. அவருக்குப் பதிலாக ரெய்னா இடம் பெறலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இருவருக்கும் வாய்ப்பு வழங்கப்படும் பட்சத்தில் சிறப்பான ஆட்டத்திறனை வெளிப்படுத்துவார்கள் என ரசிகர்கள் நம்புகின்றனர்.

# இலக்கு நோக்கிப் பயணிப்போம்

(கொழும்பு)

எந்த நாடு, எந்த ஆடுகளம் என்பதற்கு அப்பால் எங்கள் இலக்கு நோக்கிய பயணத்தில் நாங்கள் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம் என இலங்கை அணித் தலைவர் குமார் சங்கக்கார தெரிவித்தார்.

மும்பாயில் வரும் 18ஆம் திகதி நியூசிலாந்து, இலங்கை அணிகளுக்கிடையிலான லீக் போட்டி நடைபெறவுள்ளது. இதற்கான நேற்று முன்தினம் கொழும்பிலிருந்து மும்பாய் புறப்படும்போது ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: பத்தாவது உலகக் கிண்ணப் போட்டித் தொடர் இந்தியா, இலங்கை, பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் நடைபெற்று வருகின்றது. இந்த அடிப்படையில் லீக் போட்டிகள் பங்களாதேஷ், இந்திய அணிகளுக்கு அந்தந்த நாடுகளிலேயே விளையாடுகின்றன. ஆனால், எங்களுக்கு



இது விதிவிலக்காகவுள்ளது.

இதை நாங்கள் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. எங்களைப் பொறுத்த வரையில் எந்த ஆடுகளம், எந்த நாடு என்பதற்கு அப்பால் எங்களுடைய இலக்கு என்ன என்பதே முக்கியம். அந்த இலக்கு நோக்கிய பயணத்தில் நாங்கள் சிறப்பாகச் செயற்படவே முயற்சிப்போம் என்றார்.

# கிண்ணத்தை வெல்லும் அணிகளை பட்டியலிடுகின்றார் அயர்லாந்து வீரர்


(கோல்கத்தா)

இந்தியா, தென்னாபிரிக்கா உள்ளிட்ட அணிகளுக்கு உலகக் கிண்ணத்தை வெல்லும் வாய்ப்பு அதிகம் உள்ளது என அயர்லாந்து சகலதுறை வீரர் ஆன்டிரி போத்தா தெரிவித்துள்ளார்.

பத்தாவது உலகக் கிண்ணத் தொடர், இந்திய துணைக் கண்டத்தில் நடக்கிறது. இன்று கொல்கத்தாவில் உள்ள ஈடன் கார்டன் மைதானத்தில் நடக்கவுள்ள 'பி' பிரிவு லீக் போட்டியில் அயர்லாந்து, தென்னாபிரிக்கா அணிகள் மோதுகின்றன.

இதுகுறித்து தென்னாபிரிக்காவில் பிறந்த, அயர்லாந்து அணியின் சகலதுறை வீரர் ஆன்ட்ரி போத்தா கூறியதாவது: உலகக் கிண்ணத் தொடரில் எந்த அணிக்கு எதிராக விளையாடினாலும், அதனை மிகப்பெரிய போட்டியாகவே கருதுகிறேன். தற்போதுள்ள சூழ்நிலையில் இந்தியா, தென்னாபிரிக்கா அணிகளுக்கு உலகக் கிண்ணத்தை வெல்லும் வாய்ப்பு பிரகாசமாக உள்ளது. சமீபத்தில் நடந்த இந்தியா, தென்னாபிரிக்காவுக்கு இடையிலான போட்டியை சிறந்த போட்டியாக கருதுகிறேன். இப்போட்டியை என்னால் முழுமையாக பார்க்க முடியவில்லை. கடைசி நேரத்தில் தென்னாபிரிக்க வீரர்களின் செயற்பாடு மெய்சிலிர்க்க வைத்தது.

இந்த மிகப் பெரிய வெற்றிக்கு பின், தெண்ணாபிரிக்க அணியினர்




மனதளவில் சிறிது ஓய்வு அடைந்திருப்பார்கள். இதனை எங்களுக்குச் சாதகமாகக் கருதுகிறேன். இதன்மூலம் இன்று நடக்கவுள்ள போட்டியில் தென்னாபிரிக்க அணியை வீழ்த்த முடியும் என நம்புகிறேன்.

மேற்கிந்தியத்தீவுக்கு எதிரான போட்டியில் வெற்றிக்கு அருகில் சென்று கோட்டைவிட்டது ஏமாற்றம் அளிக்கிறது. இங்கிலாந்துக்கு எதிராக கிடைத்த சாதனை வெற்றியை என்றும் மறக்க முடியாது. இதுவரை விளையாடிய நான்கு போட்டியில், மூன்றில் தோல்வி கண்டிருப்பதால், காலிறிதிக்கு முன்னேற வாய்ப்பு இருப்பதாகத் தெரியவில்லை. இன்னும் இரண்டு போட்டிகள் மீதம் இருப்பதால், இதில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வெற்றி பெற முயற்சிப்போம். ஒருவேளை அதிர்ஷ்டம் கைகொடுக்கும் பட்சத்தில், காலிறிதிக்கு முன்னேறுவோம் என்றார்.

# சிறப்பான ஆட்டம் தொடரும்

(கொல்கத்தா)



இன்றைய போட்டியிலும் எங்களது சிறப்பான ஆட்டம் தொடரும் என தென்னாபிரிக்க அணித் தலைவர் ஸ்மித் தெரிவித்தார்.

அயர்லாந்து அணியுடனான இன்றைய போட்டி குறித்து கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: இந்திய அணியுடனான போட்டியில் நல்ல பாடங்களை நாங்கள் கற்றுள்ளோம். போட்டியின் நிலைமைக்கு ஏற்றவாறு எங்கள் வியூகங்கள் அமையும். அதேவேளை, இன்றைய போட்டியிலும் எங்களது சிறப்பான ஆட்டம் தொடரும் என்றார்.

## உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2011

**அன்புள்ள டோனிக்கு!**

தென்னாபிரிக்க, இந்திய அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் ஆட்டத்தின் பின்னரான ரசிகர்களின், கிரிக்கெட் விற்பன்னர்களின் உணர்வலைகளின் மத்தியில், இலத்திரனியல் ஊடகங்களில், ஆட்டத்தின் பின்னரான உங்கள் பத்திரிகையாளர் சந்திப்பைப் பார்க்க முடிந்தது. உங்கள் மத்திய வரிசைத் துடுப்பாட்ட வீரர்கள் பற்றிக் குறிப்பிட்டிருந்தீர்கள். முற்றிலும் உண்மை. சச்சின், சேவாக், கம்பீர் அமைத்துக் கொடுத்த அசைக்க முடியாத அத்திவாரத்தில் உறுதியான கட்டடம் ஒன்றை அமைக்க அவர்கள் துணை புரியவில்லைத்தான். நீங்கள் மிக நம்பிக்கையுடன் ஒரு Partnership உருவாக்கலாம் என்று முனைந்தீர்கள். ஆனால், மத்திய வரிசை வீரர்களும் இறுதி வரிசையில் வந்தவர்களும் அதற்கான சந்தர்ப்பத்தை உங்களுக்கு வழங்கவேயில்லை என்பதை ஆட்டத்தைப் பார்த்தவர்கள் நன்றாகவே புரிந்துகொண்டார்கள். எண்ணிக்கையைக் கூட்டத்தான் வேண்டும். ஆனால், தென்னாபிரிக்க அணியுடன் அதனை எவ்வாறு செய்ய வெண்டும் என்பதைப் புரிந்து கொள்ள மறந்துவிட்டார்கள். நிச்சயமாக இது உங்கள் குற்றமல்ல.

இன்னொரு விடயத்தைச் சுட்டிக்காட்டியிருந்தீர்கள். அது உங்கள் கனவான் இயல்பையும், எல்லாவற்றுக்கும் பொறுப்புக்கூற வேண்டியவர் அணித் தலைவர் தான் என்று நீங்கள் உணர்ந்து கொண்ட உயர் பண்பையும் காட்டி நிற்கிறது. அதாவது இறுதி ஓவரை நெஹ்றாவைக் கொண்டு வீசச் செய்தமை தவறுதான் என்று ஏற்றுக் கொண்டிருந்தீர்கள். இந்த விடயத்தை இன்னும் சிறிது ஆழமாகப் பார்த்தால் நெஹ்றாவை விட சகீர்கான் தான் இறுதி ஓவருக்குப் பொருத்தமானவர் என்பதே எல்லோரது அபிப்பிராயமாக இருக்கிறது. ஆனால், முன்னதாகவே திட்டமிட்ட முறையிலேயே நீங்கள் பந்து வீச்சாளர்களைப் பயன்படுத்தியதையும் உணர முடிகின்றது. எனினும் நெஹ்றாவிற்குப் பதிலாக சகீர்கானைப் பயன்படுத்தி இருக்கலாம். நெஹ்றா ஒன்றும் மோசமான பந்து வீச்சாளர் அல்ல. ஆனால், சகீர்கானின் சராசரி இந்த ஆட்டத்தில் சிறப்பாக இருந்தது. (13 ஓட்டங்கள் கொடுக்க முன்னம்) இங்கு நீங்கள் எதிர்கொண்ட அணி இமாலயத் திறமை கொண்ட தென்னாபிரிக்க அணி என்பதால் சகீர்கானைப் பயன்படுத்தி இருக்கலாம் என்று தோன்றுகிறது. மற்றப்படி இறுதி ஓவரை வீசுவதற்கு நெஹ்றா எவ்விதத்திலும் தகுதி குறைந்தவர் என்று பொருட்படக் கூறப்படவில்லை. சகீர்கானின் அனுபவம் சிலவேளை முடிவினை மாற்றியிருக்கும் என்றாலும் கிரிக்கெட் ஆட்டத்தில் இதுதான் நடக்கும் என்று உறுதிபடக் கூறிவிட முடியாதுதான். உங்களுக்கு இன்னமும் ஒரேயொரு ஆட்டம் எஞ்சியிருக்கிறது. அது மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு எதிரான ஆட்டம். அவர்களும் எதிர்பாராத வேளைகள் சீறியெழும் அணியாக மாறிக் கொண்டிருக்கிறார்கள். எனினும் நீங்கள் அந்த ஆட்டத்தில் வீறுகொண்டு எழுவீர்கள் என்று எதிர்பார்க்கிறோம். நீங்கள் காலிறிதிப் போட்டிகளில் முழு நம்பிக்கையுடன் களம் இறங்க இந்த ஆட்டம் உங்களுக்கு நல்ல வாய்ப்பாக இருக்கும் என்றே நம்புகிறோம். இன்னொரு புறம் இந்த ஆட்டத்தில் சுரேஷ் ரெய்னாவுக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுத்தால் அவர் இன்னும் உங்கள் பலத்தை அதிகரிப்பார். அவர் வீறுகொண்ட இளைஞர் என்பதைப் பல ஆட்டங்களில் பார்த்திருக்கிறேன்.

சுற்றுப் போட்டியில் எதிர்வரும் ஆட்டங்கள் வெற்றியாக அமைய வாழ்த்துக்கள். உங்கள் கனவான் தன்மைக்கு எங்கள் கௌரவம்.

ஒரு ரசிகன்.

ஜோசப் கிருஷ்ணா

**தினமொரு தகவல்**

ICC Cricket World Cup 2011

**தினமுரசு குடும்பத்தினர் பங்குபற்ற முடியாது.**

1) மார்ச் 16 ஆம் திகதி நடைபெறவுள்ள அவுஸ்ரேலியா மற்றும் கனடா அணிகளுக்கிடையிலான போட்டியில் வெல்லப்போகும் அணி எது?

2) இப்போட்டியிள் ஆட்டநாயகனாகும் வீரர் யார்?

பெயர்: ..............................

முகவரி : ..............................

போ.இல : ..............................

விடைகள் : 01) ..............................

02) ..............................

**போட்டி இல: 26**

தினமொரு பரிசுப் போட்டியில் வெற்றிபெற்றோர் விபரம் விரைவில் அறிவிக்கப்படும்

உங்கள் விடைகளை பின்வரும் விலாசங்களில் வைக்கப்பட்டுள்ள பெட்டிகளிலும் இடலாம்.

தினமுரசு காரியாலயம்
373, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

தினமுரசு விளம்பரப்பணிமனை
M.P.C.S. கட்டடம்
127, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

விடைகளை 16 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவையுங்கள்.

## தினமுரசு பாகிஸ்தான் எதிர் சிம்பாப்வே SCORE CARD

மைதானம் : பல்லேகல திகதி : 14-03-2011 ICC Cricket World Cup 2011

நாணயச் சுழற்சி வெற்றி சிம்பாப்வே : முதலில் துடுப்பாட்டம்.

| வீரர்கள் | | ஓட்டம் |
|---|---|---|
| 01) எம். ரெய்லர் | c கம்ரன் b அப்துல் ரசாக் | 04 |
| 02) சகப்வா | lbw b உமர் குல் | 00 |
| 03) தைபு | c அப்ரிடி b வஹாப் றியாஸ் | 19 |
| 04) வி. சிமண்டா | c மிஸ்பா b உமர் குல் | 05 |
| 05) ஆர். எர்வின் | b மொகமட் ஹபீஸ் | 52 |
| 06) லம்ப் | c&b அப்ரிடி | 16 |
| 07) சிக்கும்புறா | not out | 32 |
| 08) உட்சேயா | c கம்ரன் b உமர் குல் | 18 |
| 09) கிறீமர் | | |
| 10) மஸகட்சா | | |
| 11) பிறைஸ் | | |
| உதிரிகள் | (lb 2, w 2, nb1) | 05 |
| மொத்தம் | (7 W :39.4 ஓவர்கள்) | 151 |

| வீரர்கள் | | ஓட்டம் |
|---|---|---|
| 01) மொகமட் ஹபீஸ் | c பிறைஸ் b உட்சேயா | 49 |
| 02) அகமட் சஜாட் | st தைபு b பிறைஸ் | 08 |
| 03) அஜாட் சபீக் | not out | 78 |
| 04) அப்ரிடி | b பிறைஸ் | 03 |
| 05) யூனிஸ்கான் | not out | 13 |
| 06) மிஸ்பா உல் ஹக் | | |
| 07) அப்துல் ரசாக் | | |
| 08) கம்ரன் அக்மல் | | |
| 09) அப்துர் ரஹ்மான் | | |
| 10) உமர் குல் | | |
| 11) வஹாப் றியஸ் | | |
| உதிரிகள் | (w 13) | 13 |
| மொத்தம் | (3 W: 34.1/38 ஓவர்கள்) | 164 |

| பந்து வீச்சு | O | R | W |
|---|---|---|---|
| அப்துல் ரசாக் | 07 | 24 | 01 |
| உமர் குல் | 7.4 | 36 | 03 |
| வஹாப் றியாஸ் | 06 | 21 | 01 |
| அப்ரிடி | 08 | 33 | 01 |
| மொகமட் ஹபீஸ் | 03 | 11 | 01 |

| பந்து வீச்சு | O | R | W |
|---|---|---|---|
| மஸகட்சா | 06 | 44 | 00 |
| பிறைஸ் | 08 | 21 | 02 |
| உட்சேயா | 07 | 24 | 01 |
| லம்ப் | 07 | 44 | 00 |
| கிறீமர் | 6.1 | 31 | 00 |

7 விக்கெட்டுக்களால் பாகிஸ்தான் அணி வெற்றி. ஆட்டநாயகன் : உமர் குல்


## பாகிஸ்தான் வெற்றி

(பல்லேகல)

சிம்பாப்வே அணிக்கெதிரான போட்டியில் பாகிஸ்தான் அணி ஏழு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

பத்தாவது உலகக் கிண்ணப் போட்டித் தொடரின் 33ஆவது போட்டி கண்டி பல்லேகல மைதானத்தில் நேற்று பகலிரவு ஆட்டமாக நடைபெற்றது. இப்போட்டியில் முதலில் ஆடிய சிம்பாப்வே அணி, 39.4 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 151 ஓட்டங்களைப் பெற்றிந்த வேளை மழையால் ஆட்டம் தடைப்பட்டது.

இந்நிலையில் டக்வெத் லூயிஸ் முறைப் படி பாகிஸ்தான் அணி 38 ஓவர்களில் 162 ஓட்டங்கள் வெற்றியிலக்கு வழங்கப்பட்டது. இதற்கமைய ஆடிய பாகிஸ்தான் அணி, 34.1 ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. போட்டியின் ஆட்டநாயகனாக உமர்குல் தெரிவானார்.




### இன்றைய ஆட்டம்

தென்னாபிரிக்கா எதிர் அயர்லாந்து

மைதானம் கொல்கொத்தா

பகலிரவு ஆட்டம்

ICC Cricket World Cup 2011



ஹட்ரிக் வாய்ப்பை தவறவிட்டது மிகுந்த ஏமாற்றமே. இருப்பினும் இது தொடர்பாக அலட்டிக்கொள்ள விரும்பவில்லை. எனது கிரிக்கெட் வாழ்க்கையில் சிறந்த ஆட்டம் எனில் அது சிம்பாப்வே அணிக்கெதிரான இந்தப் போட்டியே என இலங்கை அதிரடி வீரர் டில்சான் தெரிவித்தார்.


இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: அன்றைய நாள் எனக்கு அதிர்ஷ்டம் மிகுந்த நாள். என் கிரிக்கெட் வாழ்க்கையில் மறக்க முடியாத நாள். இது வரை நான் விளையாடிய போட்டிகளில் மிகச் சிறந்த ஆட்டமாக இப்போட்டி எனக்கு அமைந்தது. இதையிட்டு மகிழ்ச்சி என்றார்.

## பங்களாதேஷ் வெற்றி

(சிட்டாகொங்)

நெதர்லாந்து அணிக்கெதிரான போட்டியில் பங்களாதேஷ் அணி 6 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

பத்தாவது உலகக் கிண்ணப் போட்டித் தொடரின் 32ஆவது போட்டி நேற்று சிட்டாகொங் மைதானத்தில் இடம்பெற்றது. இதில் முதலில் ஆடிய நெதர்லாந்து அணி 46.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 160 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ரென் டுஷாட் ஆட்டமிழக்காது 53 ஓட்டங்களைப் பெற்றார். பதிலுக்கு ஆடிய பங்களாதேஷ் அணி 41.2 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் ஆட்டமிழக்காது இம்ருல் கைஸ் 73 ஓட்டங்களைப் பெற்று ஆட்டநாயகன் விருதை வென்றார்.




## தினமுரசு பங்களாதேஷ் எதிர் நெதர்லாந்து SCORE CARD

மைதானம் : சிட்டாகொங் திகதி : 14-03-2011 ICC Cricket World Cup 2011

நாணயச் சுழற்சி வெற்றி நெதர்லாந்து : முதலில் துடுப்பாட்டம்.

| வீரர்கள் | | ஓட்டம் |
|---|---|---|
| 01) எஸ். சுவாஸின்ஸ்கி | run out ஷாகிப் அல் ஹசன் | 28 |
| 02) பர்ரேஷி | lbw b ஷாகிப் அல் ஹசன் | 10 |
| 03) முட்டாஸர் புக்காரி | c ரகீம் b அப்துர் ரசாக் | 06 |
| 04) கூப்பர் | run out ரகீம்/ஷாகிப்அல் ஹசன் | 29 |
| 05) ரென் டுஷாட் | not out | 53 |
| 06) கெர்வோஸி | st ரகீம் b சுராவாட்டி சூவா | 18 |
| 07) டி. குறூத் | lbw b அப்துர் ரசாக் | 04 |
| 08) பேர்மன் | c கைஸ் b அப்துர் ரசாக் | 00 |
| 09) பொறேன் | run out ரகீம்/சுராவாட்டி சூவா | 03 |
| 10) எம். சீலார் | lbw b ரூபில் ஹொசெய்ன் | 00 |
| 11) அடில்ராஜ் | run out இஸ்லாம்/நயீஸ் | 00 |
| உதிர்கள் | (lb 9) | 09 |
| மொத்தம் | (all out : 46.2 ஓவர்கள்) | 160 |

| வீரர்கள் | | ஓட்டம் |
|---|---|---|
| 01) தமீம் இக்பால் | b முட்டாஸர் புக்காரி | 00 |
| 02) இம்ருல் கைஸ் | not out | 73 |
| 03) ஜூனெய்ட் சித்திக் | c சீலார் b பொறேன் | 35 |
| 04) ஷாரிய நபீஸ் | b கூப்பர் | 37 |
| 05) ஷாகிப் அல் ஹசன் | c ரென்டுஷாட் b கூப்பர் | 01 |
| 06) முஸ்டிகுர் ரகீம் | not out | 11 |
| 07) மொகமதுல்லா | | |
| 08) சுராவாட்டி சூவா | | |
| 09) அப்துர் ரசாக் | | |
| 10) சரீப் இஸ்லாம் | | |
| 11) ரூபில் ஹொசெய்ன் | | |
| உதிரிகள் | (b2, 1b 3, w3, nb1) | 09 |
| மொத்தம் | (4 W: 41.2 ஓவர்கள்) | 166 |

| பந்து வீச்சு | O | R | W |
|---|---|---|---|
| சரீப் இஸ்லாம் | 9.2 | 15 | 00 |
| அப்துர் ரசாக் | 10 | 29 | 03 |
| ஷாகிப் அல் ஹசன் | 08 | 38 | 01 |
| ரூபில் ஹொசெய்ன் | 09 | 36 | 01 |
| சுராவாட்டி சூவா | 10 | 33 | 01 |

| பந்து வீச்சு | O | R | W |
|---|---|---|---|
| முட்டாஸர் புக்காரி | 06 | 14 | 01 |
| ரென் டுஷாட் | 06 | 30 | 00 |
| எம். சீலார் | 10 | 25 | 00 |
| பொறேன் | 05 | 28 | 01 |
| கூப்பர் | 7.2 | 33 | 02 |

6 விக்கெட்டுக்களால் பங்களாதேஷ் அணி வெற்றி. ஆட்டநாயகன் : இம்ருல் கைஸ்

அனுசரணையாளர்: செல்வம் மரக்காலை

உங்கள் தேவைகளுக்கு ஏற்ற விதத்தில் எந்த இனத்தில், எந்த விதத்தில், எந்த அளவில் தேவையுள்ளதோ! மனம் போல் தெரிவு செய்திட... உடனே விரையுங்கள்!

(C/610) பலாலி வீதி, யாழ்ப்பாணம். செல்வம் மரக்காலை T.P. :- 077 3360 781 ICC Cricket World Cup 2011

# சுயேட்சையாகப் போட்டியிடவுள்ளதாக நடிகரான மன்சூர் அலிகான் அறிவிப்பு



(சென்னை)

பிரபல வில்லன் நடிகர் மன்சூர் அலிகான் சட்டமன்றத் தேர்தலில் சுயேச்சையாகப் போட்டியிடுகிறார். இது குறித்து அவர் அளித்த பேட்டி வருமாறு -

அரசியல் கட்சிகள் வாக்காளர்களை மறந்து விட்டன. எந்தக் கட்சியுடன் கூட்டணி வைப்பது, எவ்வளவு தொகுதிகள் ஒதுக்குவது என்பதில் தான் கவனம் செலுத்துகின்றன. தேர்தல் முடிந்ததும் தேனிலவு முடிந்தது என்று சொல்லி உறவை முறித்து விடுவர்.

இதுபோன்ற செயல்கள் எனக்கு ஆத்திர மூட்டியுள்ளது. எனவே, எந்தக் கட்சியிலும் சேராமல் தேர்தலில் தனித்துப் போட்டியிட முடிவு செய்துள்ளேன்.

எந்தத் தொகுதியில் நிற்பேன் என்பதை ஓரிரு தினங்களில் அறிவிப்பேன். ஏற்கனவே 1999 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் பெரியகுளம் தொகுதியில் போட்டியிட்டு, 88 ஆயிரத்து 546 வாக்குகள் வாங்கியுள்ளேன்.

அதன் பிறகு திருச்சித் தொகுதியில் நாடாளுமன்றத் தேர்தலிலும் நின்றேன். முக்கிய ஆளும் கட்சி அங்கு தோற்றுப்போவதற்கு நான் காரணமாக அமைந்தேன். இந்தமுறை நான் நிச்சயம் வெற்றி பெறுவேன். நான் சட்டமன்றத்துக்குச் சென்றால் ஆளும் கட்சியின் கால்களில் விழுந்தாவது தொகுதி மக்களின் குறைகளைத் தீர்க்கப் பாடுபடுவேன்.

புளி வியாபாரம், வத்தல் வியாபாரம் செய்பவர்களின் பணத்தையெல்லாம் தேர்தல் கமிஷன் அதிகாரிகள் பிடுங்குகிறார்கள். உண்மையாகவே பணத்தைக் கடத்துபவர்கள் இவர்களிடம் மாட்டுவதில்லை. தமிழர் நலன்கள் புறக்கணிக்கப்படுகின்றன. வெளி மாநிலத்தவர் தான் இங்கு ஆதிக்கம் செய்கின்றனர். தேர்தலுக்குப் பிறகு தமிழர்களுக்கு உதவுவதற்காக தமிழ்ப் பேரரசு என்ற அமைப்பைத் தொடங்க இருக்கிறேன்.

# தமிழக சட்டமன்றத் தேர்தலில் மகளிர் ஆதிக்கம் அதிகரிப்பு

(சென்னை)

தமிழகத்தில் சட்டமன்ற தொகுதிகளின் இறுதி வாக்காளர் பட்டியல் கடந்த ஜனவரி 10 ஆம் திகதி வெளியிடப்பட்டது. 234 தொகுதிகளில் 2 கோடியே 30 லட்சத்து 86 ஆயிரத்து 295 ஆண வாக்காளர்களும் 2 கோடியே 28 லட்சத்து 63 ஆயிரத்து 481 பெண் வாக்காளர்களும் உள்ளனர்.

844 பேர் திருநங்கைகள். மொத்தமாகவுள்ள 234 தொகுதிகளில் 93 தொகுதிகளில் பெண் வாக்காளர்கள் அதிகமுள்ளனர்.

சென்னையில் 8 தொகுதிகளில் பெண் வாக்காளர்கள் அதிகமாக இருக்கிறார்கள்.

கரூர் மாவட்டத்தில் அரவக்குறிச்சி, கரூர், கிருஷ்ணராயபுரம் (தனி), குளித்தலை தொகுதிகளும் - சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடி, திருப்பத்தூர், சிவகங்கை, மானாமதுரை (தனி) தொகுதிகளும் தேனி மாவட்டத்தில் ஆண்டிப்பட்டி, பெரியகுளம் (தனி), போடி நாயக்கனூர், கம்பம் தொகுதிகளும் உள்ளன. இங்குள்ள அத்தனை தொகுதிகளிலும் ஆண்களை விடப் பெண் வாக்காளர்களே அதிகமாக உள்ளனர்.

விருதுநகரில் உள்ள 7 தொகுதிகளிலும், பெரும்பலூர் மாவட்டத்தில் 2 தொகுதிகளிலும் பெண் வாக்காளர்களே அதிகமாக உள்ளனர்.

இவ்வாறு 93 தொகுதிகளில் பெண் வாக்காளர்கள் அதிகமாக உள்ளனர். ஆனால், தர்மபுரி, திருப்பூர், திருவாரூர், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் மொத்தமாகவுள்ள 23 தொகுதிகளிலும் ஆண் வாக்காளர்கள் அதிகமாக இருக்கிறார்கள்.




## எதிர்க்கட்சிகள் ஆட்சியின்போது செய்யத் தவறியதை பிரசாரத்தின்போது கூறுவோம் என்கிறார் ராமதாஸ்

தேர்தல் பிரசாரத்தின்போது தி.மு.க.வின் சாதனைகளையும், எதிர்க்கட்சிகள் ஆட்சியின்போது செய்யத் தவறியதையும் பேசுவோம் என ராமதாஸ் கூறினார்.

பிரசாரத்தின்போது பா.ம.க.வின் கொள்கைகள், தி.மு.க.வின் 5 ஆண்டு ஆட்சியின் சாதனைகள் மற்றும் தி.மு.க. அரசு தற்போது செய்யவிருக்கும் முக்கிய திட்டங்கள் குறித்து விளக்கி பிரசாரத்தில் ஈடுபடுவோம்.

இன்னா நாற்பது, இனியவை நாற்பது போல தி.மு.க. ஆட்சியின் சாதனைகள் குறித்தும், தேவைப்பட்டால் எதிர்க்கட்சிகள் ஆட்சியின்போது செய்யத் தவறியதையும் பேசுவோம். தமிழகத்திலுள்ள ஒவ்வொரு குடும்பத்தினரும் தி.மு.க. அரசால் பலன் பெற்றுள்ளனர். எனவே எங்கள் கூட்டணிக்கு மக்கள் பெரும் வெற்றி வாய்ப்பைத் தருவார்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.


# ஈழத்தமிழர்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வு திராவிடர் கழகப் பொதுக்குழுவில் தீர்மானம்

ஈழத் தமிழர்களுக்கு நிரந்தரமான அரசியல் தீர்வினை நிலைபெறச் செய்ய, தேவையான அனைத்து முயற்சிகளையும் உளப்பூர்வமாக மேற்கொள்ள வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்துவதாக, திராவிடர் கழகப் பொதுக்குழு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

வெளியிடப்பட்டுள்ள திராவிடர் கழகப் பொதுக்குழு தீர்மானங்களின் அடிப்படையில், இலங்கைத் தீவில் ஈழத் தமிழர்களை அழித்து பேரினவாதத்தை நிலை நிறுத்திக் கொண்ட பிறகும், அத்தீவில் எஞ்சியுள்ள ஈழத் தமிழர்களின் வாழ்வுரிமை அறவே புறக்கணிக்கப்பட்டு வரும் கொடுமை தொடர்ந்து கொண்டே வருகிறது.

முள்வேலி முகாமுக்குள் இன்னும் பல்லாயிரம் தமிழர்கள் முடங்கியேக் கிடக்கிறார்கள். தமிழர்களின் மரபு வழித் தாயகப் பகுதிகளில் அரசின் உதவியால் திட்டமிட்ட வகையில் சிங்களக் குடியேற்றமும் நடந்த வண்ணமாகவேயுள்ளது.

இதற்கு மேலும் காலம் கடத்தாமல், ஈழத் தமிழர்களுக்கு நிரந்தரமான அரசியல் தீர்வினை நிலைபெறச் செய்ய, தேவையான அனைத்து முயற்சிகளையும் உளப்பூர்வமாக மேற்கொள்ள வேண்டும் என்று மத்திய அரசை இப்போதுக் குழு வலியுறுத்துகிறது.



இலங்கை மீது விசாரணை நடத்தி, போர்க் குற்றவாளியாக அறிவிக்க நியாயமான சட்ட ரீதியான முயற்சிகளை மேற்கொள்ளுமாறு ஐக்கிய நாடுகள் சபையை திராவிடர் கழகப் பொதுக்குழு தமது தீர்மானத்தில் கோரியுள்ளது.



# குறள் சொல்லும் கதைகள் -31

**இன்பத்துப் பால்**

## மலர்கள்

பெண்கள் தான் மலர்களா?. இல்லை மலர்கள் தான் பெண்களா" என்று கவிஞர்களைப் போலக் கஜேந்திரனுக்கும் ஒரு சந்தேகம் நெடு நாட்களாக மனதில் இருந்து வந்தது. அதற்கான விளக்கத்தை யாரிடம் கேட்பது. ஓர் அறிஞரிடம் தான் கேட்க வேண்டும். அந்த அறிஞரிடம் கேட்டால் என்னைப் பற்றித் தவறாக நினைக்க மாட்டாரா? என்று எண்ணுவான் கஜேந்திரன்.

தமிழை விசேட பாடமாகக் கற்கும் சில மாணவர்களிடம் அவன் இதைப்பற்றிக் கேட்டுள்ளான். அவர்கள் அவனை விசித்திரமாகப் பார்ப்பார்கள். "உலகில் எத்தனையோ தீர்க்க முடியாத பிரச்சினைகள் இருக்கு. நீ ஒரு பாடு" என்று நகுலன் சொன்னான்.

"உனக்கென்ன விசர் முத்திப் போய்ச்சே. போய் ஒழுங்காய்ப் படி. கணிதத்துறையில் ஆராய்ச்சி செய்ய வேண்டிய நீ ஏன் பெண்களைப் பற்றி ஆராய்ச்சி செய்கிறாய்" என்றான் இன்னொருவன்.

யார் எதைச் சொன்ன போதும் கஜேந்திரன் வெட்கமோ துக்கமோ கொள்ளவில்லை. தன்னை ஒத்த இளைஞர்களிடம் அந்தக் கேள்வியைக் கேட்பான். சில நாட்களுக்கு முன்பு அவன், நகுலனிடம் அக் கேள்வியைக் கேட்டான்.

நகுலன் அவனை விசித்திரமாகப் பார்த்தான். பின்பு தனது வலது கையை உயர்த்தி இரண்டு விரல்களை மடித்து விட்டு "இதிலை எத்தனை விரல்கள் இருக்குதென்று சொல்லு பார்ப்பம்" என்று சிரித்தான்.

கஜேந்திரன் எதுவும் சொல்லாமல் சிரித்தான். பின் "எல்லோரும் வார்த்தைகளால் என்னை விசரன் என்று சொல்வார்கள். நீ செயலால் விசரன் என்று சொல்கிறாய் அதுதான் வித்தியாசம். தான் விரும்பிய ஒரு பெண்ணைக் காதலிப்பவன் தான் உலகத்தில் பாக்கியசாலி என நான் நினைக்கிறேன். நான் பெண்ணைப் பற்றிக் கேட்டதும் வார்த்தைகளால் விசரனென்றும், செயல்களால் விசரனென்றும் கூறும் தமிழ் படிக்கும் நீங்கள், என்னைப் போல் பெண்களை மலராக நினைத்துக் கவிஞர்கள் பாடல்கள் எடுதியதைப் படித்துத்தானே பட்டம் பெறுகிறீர்கள். அத்துடன் அப்பட்டத்தின் மூலம் தானே தொழில் பெற்று வாழ்க்கையை நடத்துகிறீர்கள். அப்படியிருக்க ஒரு கவிஞனின் சந்தேகத்தைப் பற்றிக் கேட்டால் சிரிக்கும் நீங்கள் படித்தவர்கள் தானா...? அகநானூற்றுப் பாடல்களையும், பெண்களைப் பற்றிக் கவிஞர் கூறியதையும் பரிகசிக்கும் நீங்கள் ஏன் அவர்கள் கூறியவற்றைப் படித்துப் பட்டம் பெறுகிறீர்கள். என்னைப்போல் கணிதத்தைப் படியுங்கள்" என்றான் கஜேந்திரன் கோபமாக.

நகுலனால் எதுவும் பேசமுடியவில்லை. கஜேந்திரன் கூறுவதைப் போல தமிழை ஒரு பாடமாகக் கற்பவர்கள் பெண்களையும் காதலையும் விட்டு விட முடியாது "உண்மைதான் நீ சொல்வதைக் கேலி செய்த நாங்கள் தான் விசரர்கள்" என்றான் நகுலன்.

"என்ன தம்பி வந்தநேரம் தொடக்கம் குளத்தைப் பார்த்து யோசித்துக் கொண்டிருக்கிறீர். ஏதாவது நடக்கக்கூடாதது நடந்து விட்டதோ? என்று கேட்டாள் களை பிடுங்கும் ஒரு பெண்.

திடுக்கிட்டுத் திரும்பிய கஜேந்திரன், "ஒன்றுமில்லை" என்று சிரித்தான். மீண்டும் அவனது மனம் அனிச்சம் பூக்களை நோக்கிச் சென்றது. பின், குளத்தில் மலர்ந்திருக்கும் செந்தாமரைப் பூக்களை நாடிச் சென்றது. அந்தப் பூக்களில் உள்ள செம்மை நிறம் தான் பெண்களில் உள்ள நாணமோ? வெண்டாமரைப் பூக்கள் அவளது உள்ளத்தைப் போல வெண்மையாக இருந்தன. நகரில் உள்ள பூந்தோட்டம் திடீரென்று குளக்கரைக்கு வந்து விட்டதைப் போன்ற பிரமை. அவன் சென்றால் அழகாக மலர்ந்து பலரது கண்களையும் கொள்ளை கொள்ளும் மஞ்சள் நிறமான ரோஜாப் பூவையே விரும்பிப்பார்ப்பான். அதற்குள் வித்தியாவின் முகம் தெரியும். படபடத்து மூடும் மயக்கத்தைத் தருகின்ற கண்கள் தெரியும். அதைப் பறித்துச் சென்று வித்தியாவின் முகத்தில் வைத்துப்பார்க்க வேண்டுமென்ற நினைவு வரும்.

"இவளது கண்கள் பலராலும் காணப்படும் மலர்களை ஒத்திருக்கின்றன எனக்கருதி அவளது கண்களைப் போன்ற அழகான மலர்களைக் கண்டதும் என் மனம் மயங்குகின்றது." என நினைத்தான் கஜேந்திரன்.

**கே.வி.குணசேகரம்**

*மலர்காணின் மையாத்தி நெஞ்சே இவள்கண்*
*பலர் காணும் பூவொக்கும் என்று -குறள் - 1112*

*நெஞ்சமே, இவளுடைய கண்கள் பலரும் காண்கின்ற மலர்களை ஒத்திருக்கின்றன எனக்கருதி இவளது கண்களுக்கு ஒப்பான மலர்களைக் கண்டால் நீ மயங்குகிறாய்.*

## மருந்துகளுக்கு தட்டுப்பாடா? உடன் தொடர்பு கொள்ளவும்

(கொழும்பு)

வைத்தியசாலைகளில் மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு எதுவும் ஏற்பட்டிருந்தால் உடனடியாக வைத்தியசாலைகளின் பணிப்பாளர்களைத் தொடர்பு கொள்ளுமாறு சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ளார்.

தட்டுப்பாடாக உள்ள மருந்துவகைகள் அரச மருந்தாக்கல் விநியோகப் பிரிவில் இல்லையென்றால் பிராந்திய விநியோகஸ்தர்கள் மூலம் கொள்வனவு செய்ய லாமென நிர்வாகங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு கொள்வனவு செய்யவுள்ள மருந்துவகைகளுக்கான நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், எந்தவொரு வைத்தியசாலைகளிலும் மருந்துவகைகள் இல்லாதிருக்கக் கூடாதெனவும் அவர் தெரிவித்தார்.

## ஜனாதிபதி மஹிந்த தலைமையிலான அரசை எந்தவொரு சக்தியாலும் கவிழ்க்க முடியாது

### அமைச்சர் மைத்திரிபால



(கொழும்பு)

**ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தை எந்தச் சக்தியாலும் கவிழ்க்க முடியாது என சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.**

மஹிந்த ராஜப்க்ஷ தலைமையிலான அரசைக் கவிழ்க்க சூழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டால் அதற்கெதிராக நாட்டு மக்களை அணிதிரட்டி போராட்டம் நடத்தி வெற்றி பெறுவோம் என மாத்தறையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் பிரசார கூட்டத்தில் உரையாற்றுகையில் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன இவ்வாறு தெரிவித்தார்.

2010ஆம் ஆண்டு 18 இலட்சம் மேலதிக வாக்குகளால் வெற்றி பெற்று ஜனாதிபதி நாட்டைப் பொறுப்பேற்றார்.

பல அரசாங்கங்கள், அரசியல் தலைவர்கள், இந்தியப் படையினர் இலட்சக்கணக்கானோரால் முடியாததை ஜனாதிபதி சாதித்துக் காட்டினார் என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## இன்று வேலைநிறுத்தம்

(கொழும்பு)

கல்விசார் ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து நாட்டிலுள்ள சகல பல்கலைக்கழகங்களையும் சேர்ந்த கல்விசார் ஊழியர்கள் இன்று வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

2011ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தினூடாக பல்கலைக்கழக ஆசிரியர்களின் சம்பளக் கோரிக்கைக்கு ஒரு நியாயமான தீர்வு காணப்படும் என ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் அதியுயர் உயர்கல்வி அதிகாரிகள் வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை. இதனால்தான் வேலை நிறுத்தப், போராட்டத்தை மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ளது என்று பல்கலைக்கழக ஆசிரியர்களின் சங்கங்களின் சம்மேளனத்தைச் சேர்ந்த டாக்டர் நிமல் தேவசிறி தெரிவித்தார்.

## தேர்தலின் பின் புதிய தலைவர்

(வவுனியா)

வவுனியா நகரசபை புதிய தலைவர் யார் என்பது எதிர்வரும் 17ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலின் பின்னர் அறிவிக்கப்படும் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமையகம் அறிவித்துள்ளது.

கடந்த 15ஆண்டுகளாக பதவி வகித்த ஜி.வி.நாதன் தலைவர் பதவியை இராஜினாமாச் செய்ததை அடுத்து வெற்றிடமாகவுள்ள அப்பதவிக்கு யாரை நியமிப்பது என்பது குறித்து 17ஆம்திகதிக்குப் பின்னர் த.தே.கூட்டமைப்பு தலைவர்கள் கூடி முடிவெடுப்பார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. (39)

## பாதிக்கப்பட்ட பெண்களை உள்வாங்காமல் அனுஷ்டிக்கப்பட்ட சர்வதேச மகளிர் தினம்

(கொழும்பு)

கடந்த 08ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்ட சர்வதேச மகளிர் தினத்தில் அரசாங்கத்தினால் வைபவங்கள் ஏற்பாடு செய்யப்பட்ட போதிலும் யுத்தம் காரணமாகப் பாதிக்கப்பட்ட மற்றும் விதவைகளான பெண்கள் எவரையும் இந்த வைபவத்தில் சம்பந்தப்படுத்திக்கொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை.

யுத்தம் காரணமாக 2008ஆம் ஆண்டு முதல் 2009ஆம் ஆண்டுவரை வடக்கு கிழக்கு மாகாணங்களில் சுமார் 42ஆயிரம் பெண்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களின் நலன்புரி நடவடிக்கை களுக்காக அரசாங்கம் எவ்விதமான வேலைத் திட்டங்களையும் இதுவரை உருவாக்கவில்லை. பாதிக்கப்பட்டுள்ள தமிழ்ப் பெண்களில் 10ஆயிரம் பேரின் கணவன்மார் எவ்வித குற்றச்சாட்டும் இன்றிப் பாதுகாப்புத்தரப்பினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தப் பெண்களில் 36 ஆயிரம் பேர் 18வயதுக்கும் 25வயதுக்கும் உட்பட்டவர்கள். அத்துடன் 20ஆயிரம் பெண்களுக்கு தலா மூன்று பிள்ளைகள் வீதம் உள்ளனர். கணவன் இல்லாமல் பிள்ளைகளை வளர்ப்பதிலும் பாதுகாப்பற்ற இடங்களில் வசிப்பதனாலும் இந்தப் பெண்கள் மன ரீதியான பாதிப்புகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

இவ்வாறான சூழ்நிலையில் தமிழ் விதவைகள் மத்தியில் தற்கொலைச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன எனத் தெரியவந்துள்ளது. அதேவேளை பெற்றோரை இழந்த சுமார் 27 ஆயிரம் பிள்ளைகள் இருப்பதாகவும், அவர்களின் நலனுக்காக இதுவரை எவ்விதமான வேலைத்திட்டங்களும் மேற்கொள்ளப்படாததால், அந்தப் பிள்ளைகளின் எதிர்காலம் சூனியமாகி இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## மக்களுக்கு எவ்வித சேவையையும் அரசு செய்யவில்லையெனச் சாடல்

(கொழும்பு)



அரசாங்கம் இதுவரையில் மக்களுக்கு எதுவிதமான சேவைகளையும் மேற்கொள்ளவில்லை என்பதை மக்கள் உணர்ந்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கேபண்டார, புத்தளத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

இந்த நிலையில், எதிர்வரும் 17 ஆம் திகதி மக்கள் அரசாங்கத்திற்கு புதிய செய்தி ஒன்றைச் சொல்லக் காத்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## உள்ளூராட்சித் தேர்தலுக்காக 75ஆயிரம் படையினர் கடமையில்

(கொழும்பு)

எதிர்வரும் 17ஆம் திகதி இடம்பெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டு சுமார் 75ஆயிரம் படையினர் தேர்தல் பாதுகாப்புக் கடமையில் அமர்த்தப்படவுள்ளதாக தேர்தல்கள் தொடர்பான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் காமினி நவரட்ண தெரிவித்தார்.

இதன்படி,பொலிஸ் இராணுவம்,கடற்படை,விமானப்படை மற்றும் விசேட படைப்பிரிவு ஆகியவற்றிலிருந்தே இவர்கள் தேர்தல் கடமைக்காக நிறுத்தப்படவுள்ளனர். தேர்தலுக்கு முதல் நாள்,தேர்தல் தினம், மறுநாள் என மூன்று நாட்களும் இவர்கள் கடமையில் இருப்பர்.

இந்தக் கடமைக்கென பொலிஸ் பிரிவிலிருந்து 50 ஆயிரம் பேரும் விசேட படைப்பிரிவிலிருந்து 5ஆயிரம் பேரும் முப்படைகளிலிருந்து 20 ஆயிரம் பேரும் இணைக்கப்பட்டு பணியில் நிறுத்தப்படவுள்ளனர்.

தேர்தல் பணியில் ஈடுபடும் இந்தப் படைப்பிரிவினருக்கு தேர்தல் தொடர்பாகவும்,மக்கள் வாக்களிக்க வரும்போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள்,வாக்களித்து முடிந்த பின்னர் வாக்குப் பெட்டிகள் வாக்களிப்பு நிலையங்களுக்கு கொண்டுசெல்லும் போது பின்பற்றவேண்டிய நடைமுறை கள் குறித்தும் பொலிஸ்மா அதிபரினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தேர்தல் காலத்தின் போது தேர்தல் இடம்பெறும் பகுதிகளில் விசேட பாதுகாப்பு நடைமுறைகள் பின்பற்றப் படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## வர்த்தக வரி நீக்கப்பட்டதனால் மாகாண ஊழியர்கள் பாதிப்பு

(கொழும்பு)

மொத்த மற்றும் சில்லறை விற்பனையாளர்களிடம் அறவிடப்பட்டு வந்த வர்த்தக வருவாய் வரி நீக்கப்பட்டுள்ளமையால் மாகாண வருமான வரித் திணைக்களத்தின் 95 சதவீதமான ஊழியர்கள் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வருட வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக வருவாய் வரி தேசிய கட்டுமான வரியுடன் இணைக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை வருமான சேவை ஒன்றியம் தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தின் இந்தத் தீர்மானம் காரணமாக தங்களுக்கு தொழில்வாய்ப்பு அற்றுப்போகும் அபாயம் காணப்படுவதாக அந்தச் சங்கம சுட்டிக்காட்டியுள்ளது.

இந்நிலையில் குறித்த வரியை நிர்வகித்த மாகாண வருமான வரித் திணைக்கள ஊழியர்கள் தேசிய வருமான வரித் திணைக்களத்துடன் ஒன்றிணைக்கப்பட வேண்டுமென அகில இலங்கை வருமான சேவை ஒன்றியம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, தேசிய வருமான சேவையின் வரி அதிகாரிகள், கணிப்பாளர்கள் மற்றும் பிரதி ஆணையாளர்கள் இன்று தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

மாகாண வருமான வரித் திணைக்களத்தின் வருவாய் வரி ஊழியர்களைத் தேசிய வருமான வரித் திணைக்களத்துடன் ஒன்றிணைத்தல் உள்ளிட்ட பல காரணங்களை ஆட்சேபித்து இந்தத் தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## உருப்படியான ஹெலிகள் இல்லையா? புதியவற்றை வாங்க ஜனாதிபதி பணிப்பு

(கொழும்பு)



பயணம் செய்வதற்கு உருப்படியான உலங்குவானூர்திகள் இல்லாது போனால் புதியவற்றை வாங்கும்படி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இலங்கை வான்படை அதிகாரிகளிடம் எரிச்சலை வெளிப்படுத்தியுள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச பயணம் மேற்கொள்ளும் உலங்குவானூர்திகள் அடிக்கடி பழுதடைந்து போகின்றன.

இதன் காரணமாகவே, கடந்த வாரம் வான்படை உயர் அதிகாரிகளை அழைத்து ஜனாதிபதி தனது சினத்தை வெளிப்படுத்தினார்.

கடந்த வியாழக்கிழமை தேர்தல் பரப்புரைக்காக அவர் மொனராகலவுக்குச் சென்றார். கூட்டம் முடிந்த பின்னர் முக்கிய பிரமுகர்களுக்கான உலங்குவானூர்தியில் ஏறினார்.

அடுத்து அவர் கொழும்பில் நடைபெறும் திருமணம் ஒன்றில் சாட்சிக் கையொப்பமிட வேண்டியிருந்தது.

ஆனால் அவரது உலங்குவானூர்தியை கிளப்ப முடியவில்லை. அது பழுதடைந்து விட்டது.

பின்னர் அவர் பாதுகாப்பு அதிகாரிகள் பயணம் செய்த உலங்குவானூர்தியில் ஏறிக் கொண்டார். அது வீரவில வான்படைத் தளத்தில் அவரைக் கொண்டு சென்று இறக்கி விட்டது.

பின்னர் பாதுகாப்பு அதிகாரிகளை ஏற்றி வரும் வரை ஜனாதிபதி வீரவிலவில் காத்திருக்க வேண்டியிருந்தது.

ஆனால் சீரற்ற காலநிலையால் பாதுகாப்பு அதிகாரிகளின் உலங்குவானூர்தியும் பறக்க முடியாமல் திரும்பி வந்தது.

பின்னர் அங்கிருந்து வை-12 வானூர்தியில் ஏறிக் கொழும்புக்குப் புறப்பட்டார். வழக்கமாக அது இரத்மலானையில் தரையிறக்கப்படும்.

ஆனால் அன்று வான்படையின் 60ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வுகள் நடைபெற்றதால் வானூர்தியை கட்டுநாயக்காவுக்குக் கொண்டு சென்று தரையிறக்கினார் விமானி.

அங்கிருந்து வேறொரு உலங்குவானூர்தியில் மகிந்த ராஜபக்ஷ கொழும்பு சென்றார்.

அப்போது மிகவும் தாமதமாகி விட்டது. திருமணத்துக்காக குறிக்கப்பட்ட சுபநேரமும் கடந்து போனது.

இதனால் மகிந்த ராஜபக்ச அவர்களிடம் மன்னிப்புக் கேட்கும் நிலை ஏற்பட்டது.

இதுபோன்று அடிக்கடி நிகழ்வதாலேயே ஜனாதிபதி வான்படை உயர் அதிகாரிகளை அழைத்துக் கடுமையாக சாடியுள்ளார்.

# சண்டைபிடிக்கும் தேர்தல் முறையைத்தான் ஜே.ஆர் இந்நாட்டிற்கு வழங்கியிருக்கின்றார்



(கொழும்பு)

ஆளுக்கு ஆள் சண்டை பிடித்துக்கொள்ளும் தேர்தல் முறையைத்தான் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்த்தன வழங்கியுள்ளாரென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

திருகோணமலையில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

இன, மத, மொழி, குல மாகாண பேதங்களையும், பகைமை, குரோதங்களையும் மறந்து சகலரும் ஒன்றுபட்டால் தான் நாட்டைத் துரிதமாக அபிவிருத்தி செய்ய முடியும்

நாம் பிறந்த இந்தத் தாயகத்தைப் பேதங்களுக்கு அப்பால் ஒன்றுபட்டு மேம்படுத்துவது எம்மெல்லோரதும் பொறுப்பு என்று ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இம்மாநாட்டில் ஜனாதிபதி மஹிந்த ராஜபகஷ தொடர்ந்தும உரையாற்றுகையில், பொலிஸாரின் அறிக்கையின்படி இப்போது தேர்தல் தொடர்பான வன்முறைகளும், சண்டைகளும் கட்சிகளுக்கிடையில் இடம்பெறுவது மிகவும் குறைந்து விட்டது.

ஆனால், ஒரே கட்சிக்குள்ளான அபேட்சகர்களுக்கிடையில் தான் அதிக சண்டைகளும், மோதல்களும் இடம்பெறுகின்றன. விருப்பு வாக்குக்காகவே இச்சண்டை இடம்பெறுகின்றது.

எம்மால் எப்போதும் இன்னொரு இனத்துடன் பகைமை பாராட்டி, சண்டை பிடித்து, நாட்டைப் பிரித்துக் கொண்டு வாழவும் முடியாது. அபிவிருத்தி அடையவும் முடியாது. அதனால் இது நாம் பிறந்த மண். நாம் இன, மத, குல, மொழி, மாகாண பேதங்களை மறந்து ஒன்றுபட்டுச் செயற்பட்டால் தான் எம்மால் முன்னேற முடியும். இதனைக் கருத்தில் கொண்டு ஒவ்வொருவரும் செயற்பட வேண்டும். நாம் பேதங்களை மறந்து ஒன்றுபட்டு எமது தாயகத்தைக் கட்டியெழுப்புவது அவசியம்.

சிலர் எம்முன்னே வெட்டினாலும் பச்சை அல்லது நீலம் அல்லது மஞ்சள் அல்லது சிவப்பு என்று கூறுவார்கள். ஆனால், எமது உடம்பை வெட்டினால் சிவப்பு நிற இரத்தம்தான் வரும். என்றாலும் பசிவரும் போது இந்த நிறங்கள் எமக்கு உதவாது.

நாட்டில் சுபீட்சத்தையும், விமோசனத்தையும் ஏற்படுத்தக் கூடியவர்கள் நாமே என்பதை நிரூபித்துள்ளோம். இதனை எல்லா அரசியல் கட்சிகளும் புரிந்து கொண்டிருக்கின்றன.

வடக்கு, கிழக்கு உட்பட முழு நாட்டிலும், பாரிய அபிவிருத்தி இடம்பெறுகின்றது. கிழக்கு அபிவிருத்திக்காக கோடிக்கணக்கான ரூபாய் செலவிடுகின்றோம். இன்று கொழும்பு, மட்டக்களப்பு உட்பட முழு நாட்டுக்கும், துரிதமாக செல்லக் கூடிய வகையில் பாதைகள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன.

திருமலை ஆஸ்பத்திரி ஐநூறு மில்லியன் ரூபா செலவில் அபிவிருத்தி செய்யப்படுகின்றது. அன்று இப்பகுதியில் நிலவிய நிலமை இப்போது இங்கில்லை. கடலில் மீன் பிடிக்கவோ, விவசாயம் செய்யவோ இப்போது தடைகள் எதுவும் கிடையாது.

திருமலை மாவட்டம் உட்பட முழு நாட்டையும் துரிதமாக அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கிறோம். இதன் நன்மைகளை இந்நாட்டு மக்களும், அவர்களது எதிர்கால சந்ததியினரும் அனுபவிப்பர். உங்களை நான் பாதுகாப்பேன்.

நான் உங்களது தோழன். உங்களது உறவினன். நான் உங்களை நம்புகின்றேன். நீங்கள் என்னை நம்புங்கள். 17ஆம் திகதி வெற்றிலைச் சின்னத்தை அமோக வெற்றிபெறச் செய்யுங்கள் என்றார்.

# குவைத்தில் பணியாற்றுவதற்காக 30 தாதிகள் அனுப்பப்படவுள்ளனர்

## சுகாதார அமைச்சர் தகவல்



(கொழும்பு)

குவைத் அரசாங்கம் தமது நாட்டிலுள்ள அரச வைத்தியாலைகளில் பணியாற்றவென 250 தாதியர்களை அனுப்புமாறு கேட்டுக்கொண்டதற்கிணங்க முதல் தொகுதியாக நன்கு பயிற்றப்பட்ட 30 தாதியர்களை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

குவைத்திற்கு அனுப்பப்படவுள்ள இந்த முதல் தொகுதி 30 தாதியர்களும் சத்திர சிகிச்சைப்பிரிவு, அதிதீவிர சிகிச்சைப்பிரிவு, விபத்து விடுதி, குழந்தைகள் நலப்பிரிவு ஆகியவற்றில் கடமையாற்றும் வகையில் விசேடமாக பயிற்றப்பட்டுள்ளனர்.

இந்தத் தாதியர்கள் குவைத்தில் பணியாற்றவுள்ள இரண்டு வருட காலப் பகுதியில், அவர்களுக்கான சகல வசதிகளையும்,ஏற்படுத்திக் கொடுப்பதுடன் உயர்ந்த ஊதியத்தையும் வழங்குவதற்கு குவைத் அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

இந்த 30 தாதியர்களை விடவும் மேலும் பலரை குவைத்திற்கு அனுப்புவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இவ்வாறு தாதியர்களை அனுப்புவதன் மூலம் பெருமளவு அன்னியச் செலாவணியைப் பெற்றுக் கொள்ளமுடியுமெனவும் அமைச்சர் மேலும் தெரிவித்ததுடன், தாதியர் பயிற்சிக் கல்லூரியில் சிறப்பாகப் பயிற்சியை முடித்த 17பேருக்கு அனுமதிக் கடிதங்களையும் வழங்கிவைத்தார்.

வெளிநாட்டு வேலை வாய்ப்பு மூலம் அரசாங்கம் தற்போது 1.8மில்லியன் ரூபாவை வருமானமாகப் பெற்றுவருவது குறிப்பிடத்தக்கது.

# கட்டுப்பாட்டுவிலை எரிபொருள் இவ்வருடம் மட்டுமே வழங்கப்படும்



(கொழும்பு)

இலங்கை மின்சார சபையின் மின் உற்பத்திக்கென கட்டுப்பாட்டு விலையான 40 ரூபாவிற்கு வழங்கப்படும் எரிபொருள் இவ்வருடத்திற்கு மட்டுமே வழங்கப்படவுள்ளதாக பெற்றோலியத்துறை அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.

மின்சார சபையின் மின் உற்பத்திக்கென பயன்படுத்தும் எரிபொருள் 82ரூபாவிற்கே தற்போது கொள்வனவு செய்யப்படுகின்றது. இவ்வாறு மின்சார சபையால் ஏற்படும் நட்டத்தை செலுத்துவதென்று திறை சேரியுடன் உடன்பட்டதற்கமைவாகவே கட்டுப்பாட்டு விலையில் எரிபொருள் வழங்கப்பட்டு வந்தது.

இந்த உடன்பாட்டின் அடிப்படையிலேயே,மின்சாரசபை, திறைசேரி,பெற்றோலியக் கூட்டுத் தாபனம் ஆகிய மூன்றும் கடந்த செப்ரம்பர் மாதம் கட்டுப்பாட்டு விலையில் எரிபொருள் வழங்குவதென உடன்பாடு காணப்பட்டது.

ஆனால் கடந்த வருடத்தின் டிசம்பர் மாதம் 31ஆம் திகதிவரை 52 பில்லியன் ரூபாவை இலங்கை மின்சார சபை,பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்க வேண்டியிருந்தது நிலுவையாக உள்ள இந்தத் தொகையை வழங்குவதென திறைசேரி உடன்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# யுத்தகாலத்தில் கைவிடப்பட்ட பசுக்கள் வடக்கு,கிழக்கில் பகிர்ந்தளிக்கப்பட்டன

(கொழும்பு)

யுத்த காலத்தில் கைவிடப்பட்டிருந்த ஒரு இலட்சம் பசுக்கள் தற்போது வடக்கு, கிழக்கில் உள்ள பால் விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் ஆலோசனையின் பேரில் இந்த நடவடிக்கை இராணுவத்தினரின் ஒத்துழைப்புடன் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டதாக கால்நடை வள அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை,வடக்கு, கிழக்கு பகுதியில் பசுக்களைத் தாக்கும் புழு நோய்க்குத் தேவையான மருந்து வகைகள் போதியளவு கையிருப்பில் இருப்பதாக கால்நடை வள அமைச்சர் தெரிவித்துள்ளார். நூற்றுக் கணக்கான பசுக்களை பலியெடுத்துள்ள இந்தப் புழு நோய், பசுக்கள் வாவி நீரை குடிப்பதனால் ஏற்படுகிறது. பசுக்களின் உடலுக்குள் புகுந்து விடும் புழுக்கள் பசுக்களின் ஈரலைத் தாக்குவதால் பசுக்கள் மரணமடைகின்றன.

இந்தப் புழுக்கள் நத்தையின உடலில் வசித்து வருபவை என்றும் வெள்ளத்தினால் பல்வேறு வகைகளில் துன்புற்று நலிவடைந்துள்ள பசுக்கள் இந்த புழு வகைகளின் தாக்கத்தினால் உயிரிழப்பதாகவும் அமைச்சுக் கூறுகிறது.

இவ்வாறான பசுக்கள் உயிரிழப்பதைத் தடுக்கும் நோக்கிலேயே அரசாங்கம் அவர்களுக்கு மருந்து வகைகளைக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அந்த மருந்துகளைப் பசுக்களுக்கு உரிய முறையில் கொடுப்பதற்கு பால் விவசாயிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

# மீனவர் பிரச்சினைக்குத் தீர்வுகாண முதற்கட்டப் பேச்சு புதுடில்லியில்



(கொழும்பு)

இலங்கை,தமிழக மீனவர்களின் மீன்பிடிப் பிரச்சினைக்குத தீர்வு காணும் வகையிலான இரு நாடுகளின் கூட்டு செயலணிக் கூட்டம் எதிர்வரும் 28ஆம் திகதி புதுடில்லியில் நடைபெறவுள்ளது.

இந்திய, இலங்கை வெளிவிவகார அமைச்சுக்களின் உயர் அதிகாரிகள், கடற்றொழில் அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு, சட்டமா அதிபர் திணைக்களம், குடிவரவுத் திணைக்களம், ஆயுதப்படைகள் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்கவுள்ளதாக இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பாக்கு நீரிணையில் மீன் பிடித்தல் தொடர்பாக தமிழ் நாட்டு மீனவர்களுக்கும் இலங்கை மீனவர்களுக்கும் இடையில் பிரச்சினைகள் நிலவி வருகின்றன.

அத்துடன் தமிழ்நாட்டு மீனவர்கள் மீது இலங்கை கடற்படையின் தாக்குதல்களும் இடம்பெறுகின்றன.

இவை போன்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதே இந்த கூட்டு செயலணிக் குழுக் கூட்டத்தின் நோக்கமாகும்.

அதேவேளை, இந்தப் பேச்சுகளில் பங்கேற்க இலங்கைத் தரப்பு பிரதிநிதிகள் குழு எதிர்வரும் 27ஆம் திகதி புதுடெல்லி செல்லவுள்ளதாக் கடற்றொழில் நீரியல்வள அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

இந்திய - இலங்கை மீனவர்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் இரு நாடுகளுக்கிடையில் மேற்கொள்ளப்படவுள்ள புரிந்துணர்வு உடன்பாடு பற்றிய முதற்கட்டப் பேச்சு இந்தியாவில நடைபெறவுள்ளது.

இதற்கென இலங்கையின் உயர் மட்டக்குழு எதிர்வரும் 27ஆம் திகதி புதுடெல்லி செல்லவுள்ளது.

இந்தக் குழுவில் வெளிவிவகார அமைச்சு, கடற்றொழில் நீரியல்வள அமைச்சு மற்றும் கடற்படை அதிகாரிகளும் இடம்பெறவுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

வாழைநார் கைத்தொழில் உற்பத்தி

# இந்தியத் தொழிற்துறை வல்லுநர்களுடன் ஆராய்வு



(யாழ்ப்பாணம்)

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில் வாழைநார் சார்ந்த கைத்தொழில் உற்பத்திகளை இந்தியத் தொழிற்துறை சார்ந்த வல்லுநர்களின் ஆதரவுடன் மேம்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடலொன்று இடம் பெற்றுள்ளது.

கொழும்பிலுள்ள அமைச்சரின் அலுவலகத்தில் அதன் செயலாளர் சிவஞானசோதி தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் தனியார் துறையினரும் கைத்தொழில் துறை சார்ந்த தொழில் முயற்சியாளர்களும் கலந்துகொண்டனர்.

இதன் போது வாழை மரத்தின் பயன்பாடுகள் குறித்தும் வாழைநார் சார்ந்த பல்வேறு தொழிற்துறை அபிவிருத்தித் திட்டங்கள் குறித்தும் இந்தியத் தொழில்துறை வல்லுனர்களான கலாநிதி கொஸ்வாமி கலாநிதி கலிற்றா ஆகியோரால் விளக்கமளிக்கப்பட்டன.

வாழைநார் சார்ந்த உற்பத்தியை பெருக்குதல் மற்றும் உற்பத்தி செய்யப்படும் பொருட்களைச் சந்தைப்படுத்தல் உள்ளிட்ட விடயங்கள் குறித்து இங்கு ஆராயப்பட்டன.

இக் கலந்துரையாடலில் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் பொதுமுகாமையாளர் ஜஸ்மின் மன்னப்பெருமாவும் உடனிருந்தார்.

# இந்திய ரயில் எஞ்சின்கள் இறக்குமதியை அரசு இடைநிறுத்தியது

## தரத்தில் எழுந்த சந்தேகமே காரணம்

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து 17 ரயில் எஞ்சின்கள் இறக்குமதி செய்வதை அரசாங்கம் இடைநிறுத்தியுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் குமார் வெல்கம தெரிவித்தார்.

இந்தியாவிலிருந்து கடன் அடிப்படையில் இறக்குமதி செய்யப்பட்ட புகையிரத என்ஜின்களின் தரம் பற்றி அவர் சந்தேகம் தெரிவித்துள்ளார்.

இவற்றில் மூன்று என்ஜின்கள் ஏற்கனவே இலங்கை வந்துசேர்ந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதில் ஒன்று பிரபலமான ருகுணு குமாரியில் பொருத்தப்பட்டு வெள்ளோட்டத்திற்காக மாத்தளையிலிருந்து கொழும்பு நோக்கி வந்துகொண்டிருந்த போது ஹிக்கடுவையில் நின்றுவிட்டது. இதனால் புகையிரதம் இரண்டு மணித்தியாலம் தாமதமாகவே கொழும்பு போய்ச் சேர்ந்தது என அமைச்சர் குமார் வெல்கம தெரிவித்தார்.

இது தொடர்பாக ஜனாதிபதி மற்றும் இந்திய உயர்ஸ்தானிகர் ஆகியோருடன் பேசியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

ஆய்வு அறிக்கையின் படியே இறக்குமதி நிறுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் குமார் வெல்கம மேலும் தெரிவித்தார்.

குறித்த என்ஜின் ஒன்றின் விலை 370 மில்லியன் ரூபா என்பது குறிப்பிடத்தக்கது.

## மூன்று அணு...

அறிவித்துள்ள போதிலும், எவ்வித நடவடிக்கைகளுக்கும் கட்டுப்படாமல் அணு உலைகளின் ஹைட்ரஜன் வாயு வெடித்துச் சிதற ஆரம்பித்துள்ளது. புகுஷிமா நகரில் அமைந்துள்ள அணு உலைகளில் முதலாவது அணு உலை கடந்த சனிக்கிழமை வெடித்த போது, அதிலிருந்து பெரும் புகையுடன் ஹைட்ரஜன் மற்றும் அணு உலைக் கழிவுத்துகள் வெளியேறி வருகின்றன. இதில் மொத்தம் 160 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 60 பேர் முழுமையான கதிரிவீச்சுத் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர். இரண்டாவது அணு உலை நேற்றுக் காலை 5 மணிக்கு வெடித்தது. இச் சம்பவத்திலும் 50 பேர் வரை காயமடைந்துள்ளனர். இதன் காரணமாக அணு உலைகளின் அருகில் அமைந்துள்ள பிரதேசங்களில் வசித்தவர்களில் இதுவரை 6 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இந் நிலையில், புகுஷிமாவின் மூன்றாவது அணு உலையில் நேற்றுப் பிற்பகல் ஏற்பட்ட வெடிப்பால் மணித்தியாலத்துக்கு 20 கிலோ மீற்றர் வேகத்தில் கதிர்வீச்சுப் பரவ ஆரம்பித்துள்ளதாகவும், இக் கதிர்வீச்சு இன்னும் வேகமாகப் பரவ வாய்ப்புள்ளதாகவும் ஜப்பான் அரசாங்கம் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

இந்த அணு உலைகளிலிருந்து முழுமையான கதிரியக்கம் வெளியாக ஆரம்பித்தால் ஏற்படும் அழிவின் அளவு ஹிரோஷிமா - நாகசாகியில் ஏற்பட்டதைவிட ஒரு இலட்சம் மடங்கு அதிகமாக இருக்கும் என ரஷ்யாவில் மூடப்பட்ட செர்னோபில் அணுசக்தி நிலையத்தில் பணியாற்றிய ஒருவர் தெரிவித்துள்ளார்.

## தொடரும் இந்திய மீனவர்களின்....

சங்கங்களின் பிரதிநிதிகள் ஈடுபடவுள்ளனர்.

ஏற்கனவே இப்பிரச்சினை சம்பந்தமான மற்றுமொரு கலந்துரையாடலை நீர்கொழும்பில் உள்ள தேசிய கடற்தொழில் அமைப்புடன் நேற்று அவ் அமைப்பின் அலுவலகத்தில் மேற்கொண்டிருந்தனர்.

இதேவேளை, இன்று காலை 10 மணிக்கு இதே பிரச்சினை சம்பந்தமான பத்திரிகையாளர் சந்திப்பொன்றையும் கொழும்பு நிப்பொன் ஹோட்டலில் நடத்தவுள்ளனர். இக்கலந்துரையாடலினை வட மாகாண கடற் தொழில் சங்கம் ஏற்பாடு செய்துள்ளது. இதற்கான ஏனைய சகல முன்னேற்பாடுகளை தேசிய மீனவர் ஒத்துழைப்பு அமைப்பு ஒழுங்கு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (மி,70)

## தடம்மாறும்....

வெளிநாட்டு வேலைகளுக்காக செல்வதனால் இலங்கை இராணுவத்தின் சார்பில் விமான பயணச்சீட்டு பதிவு அலுவலகம் துவங்க வேண்டும் என்று திட்டமிட்ட இலங்கையின் இராணுவ தளபதி, கடந்த ஆண்டே இந்த சேவையை துவங்கியதாக இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

அந்த நிறுவனத்தின் புதிய அலுவலகத்தை இலங்கை விமானப்படையின் தலைமை அலுவலகத்தை ஒட்டி நேற்று திறந்திருப்பதைத் தொடர்ந்து, இந்த விமான பயணச்சீட்டு நிறுவனத்தின் சேவைகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக இலங்கை இராணுவம் திறந்துவிட்டிருக்கிறது,

மலேஷியா, சிங்கப்பூர், தாய்லாந்து சீனா ஆகிய நாடுகளுக்கான விடுமுறை பயணங்களையும், இந்தியா, நேபாளம் ஆகிய நாடுகளுக்கு புத்தமத புனித யாத்திரைகளையும் இந்த விமான பயணச்சீட்டு நிறுவனம் ஏற்பாடு செய்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிறுவனத்தின் இணையதளம் புன்சிரிப்புடன் கூடிய பயண முகவர்களின் புகைப்படத்தையும், இந்த நிறுவனத்தின் புதிய அலுவலகத்தை திறந்து வைத்த பாதுகாப்பு செயலர் கோத்தாபய ராஜபக்ஷவின் புகைப்படத்தையும் தனது முகப்பில் வெளியிட்டிருக்கிறது.பயணிகளுக்கு சிறப்பான சேவையை சிக்கனமான கட்டணத்தில் அளிப்பதாக அந்த இணைய தளம் விளம்பரப்படுத்துகிறது.

இரண்டு லட்சத்துக்கும் அதிகமானவர்களைக் கொண்ட இலங்கை இராணுவம், சமீப காலமாக புதிது புதிதாக தொழில்களை துவங்கி வருகிறது.

வாடிக்கையாளர்களுக்கு சகாய விலையில் காய்கறிகளை அளிக்கும் நோக்கத்தை முன்வைத்து இலங்கை இராணுவத்தினர் சமீபத்தில் காய்கறி கடைகளை ஆரம்பித்தனர். வட இலங்கையில் சாலையோர கடைகளையும் சுற்றுலா . உல்லாச விடுதிகளையும் அது நடத்த துவங்கியிருக்கிறது.

சுற்றுலாப் பயணிகளுக்கு திமிங்கிலம் மற்றும் டொல்பின்களை காட்டுவதற்கான சேவைகளை இலங்கை கடற்படை நடத்த துவங்கியிருக்கிறது.

நாட்டின் நகர்ப்புற வளர்ச்சி என்பது இலங்கை இராணுவத்தின் பொறுப்பின் கீழ் கொண்டு வரப்பட்டிருக்கிறது.


இலங்கையில், இராணுவம் நடத்தும் தொழில்களின் எண்ணிக்கை பெருமளவு அதிகரித்து வருவதாக இலங்கையின் விமர்சகர் ஒருவர் கருத்து வெளியிட்டிருந்தார்.

அரச மானியத்தைக்கொண்டு தங்களின் தொழில்களை பெருக்கிக்கொள்ளும் பாகிஸ்தானின் இராணுவத்தின் பாதையில் இலங்கை இராணுவமும் செல்லத் துவங்கியிருப்பதாக அவர் கூறியிருந்தார்.

ஆனால் சிவில் நிர்வாகத்தை காட்டிலும் தங்களின் செயல்பாடுகள் சிறப்பாக இருப்பதாக கருதும் இலங்கை இராணுவம், இதனால் சில செயல்களை தங்களால் திறமையாக செய்யமுடியும் என்று உறுதியாக நம்புகிறது.

## யாழ். மாநகர சபையால்

# பண்ணை மீன் சந்தையில் இரு மாட்டிறைச்சிக் கடைகள் அமைப்பு



(யாழ்ப்பாணம்)

பண்ணை மீன் சந்தையை அண்டிய பகுதியில் அமைக்கப் பட்டுள்ள ஆட்டிறைச்சிக் கடை க்கு மேலதிகமாக அப்பகுதியில் யாழ். மாநகர சபையால் இரண்டு மாட்டிறைச்சிக் கடைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இக் கடைகளின் அமைப்பு வேலைகளை நேற்றுக் காலை யாழ். மாநகர சபை உறுப்பினர் அ.கிள்போடாசியஸ், நீர் வேலை பொறியியலாளர் எச்.எஸ்.கெண்டர்சன் ஆகியோர் நேரில் பார்வையிட்டார்கள்.


## தொழில் முயற்சி....

இந்நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சிற்கு கீழான கைத்தொழில் அபிவி ருத்திச் சபையின் செயற்திட்டங் களை மகிந்த சிந்தனையின் அடிப்படையில் வடக்கு - கிழக்கு பகுதிகளில் விரிவாக்கம் செய்யும் பொருட்டு தொழில் முயற்சி மேம்பாட்டு முகாமையாளர் தரம் 5 பதவிக்காக ஒன்பது பேர் புதிதாக நியமனம் பெற்றுள்ளனர்.


இதன் பிரகாரம் வடக்கு கிழக் குப் பகுதிகளில் இவர்களுடாக அந்தந்த மாவட்டங்களில் துறை சார்ந்த பல்வேறு தொழில் துறைகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

நேற்றைய நியமனப் பத்திரங்கள் வழங்கும் நிகழ்வில் அமைச்சர் அவர்களுடன் அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி, அமைச்சர் அவர்களின் பிரத்தியேகச் செயலாளர் தயானந்தா, ஆலோசகர் திருமதி வி.ஜெகராசசிங்கம் ஆகியோர் உடனிருந்தனர்.




# 45ஆம் நாள் நினைவு அஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 1981 | | 2011 |
| 08 | | 01 |
| 16 | | 29 |



## இரத்தினசிங்கம் சதீஸ்

வெற்றிலைக்கேணி - முள்ளியான்
(ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் மருதங்கேணி பிரதேச அமைப்பாளர்)

"வையகத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

அன்பால் அரவணைத்து எமை ஆதரித்து நின்ற தனையனே!
அகிலமது போற்ற அயராது உழைத்தாய் எம் மக்கள் உயர்வுக்கு!
பொன்போல் உள்ளங் கொண்ட பார்போற்றும் மகனே!
உன்னுயிர் ஒரு நொடியில் கொய்த காலன் கொடியவனே!
மின்னாமல் மறைந்தாய் எம் குலத்தின் உயர் குலமகனே!
நின்பிரிவால் உன் இனிய வார்த்தைகளும் அடங்கியதோ?
மகனே! மாதமொன்றரை அகன்றாலும் எமது துயர்
எம் நெஞ்சங்களை விட்டு என்றென்றும் அகலாதாடா!
தினம் தினம் எம் கண்ணீர் காணிக்கை நின் ஆத்ம சாந்திக்கே.

29.01.2011 சனிக்கிழமை அகால மரணமடைந்த எமது குலமகனின் ஈமைக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், கிரியைகளின் போதும் அதன் பின்னரும் சகல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும் உள்ளூர் வெளிநாடுகளிலிருந்து அனுதாபச் செய்திகள் தெரிவித்துக் கொண்டவர்களுக்கும் துயரத்தின் மத்தியில் பணிவுடன் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன், அந்தியேட்டிக் கிரியை கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நேற்று நடைபெற்றுள்ளதோடு, இன்று 15.03.2011 செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணிக்கு வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் எமது இல்லத்திலும் இடம்பெறும். தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**சிவசக்தி மோட்டோர்ஸ்,**
**பிரதான வீதி, பருத்தித்துறை.** (இ) **குடும்பத்தினர்.**

பொதுசன நூலகம்
நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

# வடக்கில் சுவிஸ் அரசு மேற்கொள்ளும் வீட்டுத் திட்டத்திற்கு நன்றி தெரிவிப்பு

## ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார்



(கொழும்பு)

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் அவர்களை சுவிஸ் தூதரக அதிகாரிகள் நேற்று மாலை யாழ்ப்பாணத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர். இச்சந்திப்பின் போது நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் அவர்களால் யுத்தம் முடிவுக்கு வந்த பின்பு மக்களின் மீள்குடியேற்றம், வாழ்வாதாரம் தொடர்பாக மக்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் பற்றிக் கூறியதோடு, சுவிஸ் அரசாங்கம் வடக்கில் மேற்கொண்டுவரும் வீட்டுத்திட்டம் மற்றும் வாழ்வாதார உதவிகளுக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார்.

மேலும் சுவிஸ் அரசு, கிளிநொச்சிப் பளை பிரதேசத்தில் மேற்கொண்டு வரும் உதவித்திட்டச் செயற்பாடுகளை மாவட்டத்தின் ஏனைய பிரதேச செயலக பிரிவுகளிலும் மேற்கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

இதற்கு பதிலளித்த சுவிஸ் தூதுவர், எதிர்காலத்தில் படிப்படியாக தாம் உதவித்திட்டச் செயற்பாடுகளை மேற்கொள்வதாகவும் தெரிவித்தார்.

இச்சந்திப்பில் சுவிஸ் அபிவிருத்தி கூட்டுத்தாபன திட்ட முகாமையாளர் கொன்டீஸ், சுவிஸ் அபிவிருத்தி கூட்டுத்தாபன நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் மார்டின் ஸ்டுடெர் ஆகியோருடன் ஈ.பி.டி.பி.யின் வலிகாம பிரதேச இணைப்பாளர் ஜீவன் ஆகியோர் உடனிருந்தனர்.

# தேசியப் பாடசாலைகளுக்கு 2,800 ஆசிரிய நியமனங்கள்

## கல்வி அமைச்சு நடவடிக்கை

தேசிய பாடசாலைகளிலுள்ள ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக கல்வியியற் கல்லூரிகளில் பயிற்சி பெற்ற 2,800 பேர் நியமிக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் எச்.எம்.குணசேகர தெரிவித்தார்.

முஸ்லிம் சமய மற்றும் கலாசார அமைச்சின் முன்னாள் செயலாளர் எஸ்.எச்.எம்.ஜெமீல் தலைமையிலான அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டு பிரதிநிதிகளுடன் நேற்று திங்கட்கிழமை மாலை கல்வி அமைச்சில் இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இலங்கை முஸ்லிம்களின் கல்விப் பிரச்சினை தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக கல்வி அமைச்சினால் நியமிக்கப்பட்ட மூவர் கொண்ட குழுவினால் சிபாரிசு செய்யப்பட்ட முன்மொழிகளை அமுல்படுத்துவற்கான செயற்திட்ட அறிக்கை தயாரிக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

குறித்த அறிக்கையின் தயாரிப்பு பணிகள் இரண்டு மாதத்திற்கு நிறைவு செய்யப்படும் என அவர் தெரிவித்தார்:

இதேவேளை, 1,000 இரண்டாம் தர பாடசாலைகள் அபிவிருத்தித் திட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் விபரம் எதிர்வரும் 23ஆம் திகதி கல்வி அமைச்சின் நாடாளுமன்ற ஆலோசனைக் குழுக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் எச்.எம். குணசேகர தெரிவித்தார்.

குறித்த கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களால் முன்வைக்கப்படும் ஆலோசனைகளுக்கிணங்க இறுதி அறிக்கை தயாரிக்கப்படும் என அவர் கூறினார்.

குறித்த திட்டதின் கீழ் தெரிவு செய்யப்படும் பாடசாலைகளின் கல்வி மற்றும் கல்விசாரா அனைத்து செயற்பாடுகளும் அபிவிருத்தி செய்யப்படும். இப்பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கான நிதியை உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி என்பன வழங்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த திட்டத்தில் தெரிவு செய்யப்படாத பாடசாலைகளுக்கு வழமையான அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என எச்.எம். குணசேகர மேலும் தெரிவித்தார்.

இலங்கை புத்தக வெளியீட்டு வரலாற்றில் முதன் முறையாக

# யாழ்.இளம் கவிஞர் முகிலனின் கவிதை நூல் பேருந்தில் வெளியீடு



(கொழும்பு)

இலங்கையின் புத்தக வெளியீட்டு வரலாற்றில் முதன் முறையாக கவிதை நூல் ஒன்று பேருந்தில் வெளியிடப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் நெடுந்தீவைச் சேர்ந்த இளம் கவிஞர் முகிலனின் எட்டாவது கவிதைத் தொகுதியான "பயணிகள் கவனத்திற்கு" எனும் தலைப்பிலான நூல் எதிர்வரும் 10ஆம் திகதி வெளியிடப்படவுள்ளது. இக் கவிதை நூல் வெளியீடானது வவுனியாவிலிருந்து யாழ்.நோக்கி காலை பத்து மணிக்கு புறப்படும் பேருந்தில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக தென்னிந்திய திரைப்பட இயக்குனரும் தயாரிப்பாளருமான செவ்வேள் கலந்துகொள்ளவுள்ளார். இதேவேளை, குறித்த பேருந்தில் பயணஞ் செய்யும் பயணிகளே ஏனைய விருந்தினர்களாக இருப்பார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. பயணம் ஆரம்பித்து முடியும் வரை சுமார் மூன்று மணித்தியாலங்கள் இந்நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இது பற்றி ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிட்ட கவிஞர் முகிலன், இந்தப் புத்தகத்தில் உள்ள அனைத்து கவிதைகளும் நான் பேருந்தில் பயணித்த போது சந்தித்த அனுபவங்கள் தான் பதிவாகியிருக்கின்றன.

நூற்றுக்கு நூறு வீதம் உண்மைகளை பதிவு செய்திருக்கிறேன் எனது ஏழு படைப்புகளைவிட இது வித்தியாசமாக இருக்கும் எனக் குறிப்பிட்டார்.

# விதவைகள், அநாதைகள் ஓய்வூதியச் சட்டத்தில் திருத்தம் செய்து அமுல் படுத்தப்படவுள்ளது

விதவைகள், அனாதைகள் ஓய்வூதிய சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்படவுள்ளதாக ஓய்வூதிய திணைக்களம் தெரிவித்துள்ளது. உயர் செல்வாக்கு மிக்கவரும் அரசாங்க உயர் பதவி வகித்தவருமான ஒருவர் இரண்டு ஓய்வூதியங்களைப் பெற்றுக்கொண்டிருந்தமை 2004ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் இவ்வறிவிப்பு வெளியாகியுள்ளது.

அதேவேளை, மேற்படி அதிகாரிக்கு உரித்தான ஓய்வூதியத்தை ஓய்வூதிய திணைக்களம் உடனடியாக நிறுத்தியது. இவர் நேர்மையில்லாத முறையில் பெற்ற இரண்டாவது ஓய்வூதியம் 1,519,274 ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

இவருக்கு வழங்கப்பட்ட இந்த மிகை ஓய்வூதியத்தை மீளப் பெறும் வகையில் இவருக்கு உரித்தான ஓய்வூதியத்தின் 50 சதவீதத்தை மாதாந்தம் அறவிட ஓய்வூதிய பணிப்பாளர் நாயகம் திலகரத்ன நடவடிக்கை எடுத்தார்.

இதனை எதிர்த்து மேற்படி முன்னாள் அரசாங்க அதிகாரி மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்தார். இவர் இதை எதிர்த்து உயர் நீதிமன்றில் தாக்கல் செய்த வழக்கு கடந்த 2008ஆம் ஆண்டு மார்ச் மாதம் தள்ளுபடி செய்திருந்தது.

இந்நிலையிலேயே, விதவைகள், அனாதைகள் ஓய்வூதிய சட்டத்தை தாம் இறுக்கமாக்கவுள்ளதாகவும் அதன் மூலமே ஏமாற்றுக்காரர்களுக்கு உரிய தண்டனையை வழங்க முடியும் எனவும் திலகரத்ன மேலும் கூறினார்.

## யுத்த ஆயுதங்கள்....

ஆய்வுகளின்படி உலகில் அதிகளவு ஆயுதங் களை கொள்வனவு செய்யும் நாடாக இந்தியா திகழ்கின்றது

சீனாவை விடவும் இந்தியா அதிகளவான ஆயு தங்களை இறக்குமதி செய்து வருவதாக சுவீடன் நாட்டின் மேற்படி ஆய்வு சுட்டிக்காட்டியுள்ளது.

சுவீடனை மையமாகக் கொண்டு இயங்கி வரும் ஸ்டொக்கம் சர்வதேச சமாதான ஆய்வு நிறுவகத்தினால் இந்தத் தகவல்கள் அண்மையில் வெளியிடப்பட்டுள்ளன.

2006 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் உலக ஆயுதக் கொள்வனவில் இந்தியா 9 வீதமான ஆயுதங்களைக் கொள்வனவு செய்துள்ளது

உலகின் முதனிலை ஆயுத இறக்குமதியாளராக இந்தியா மாற்றமடைந்து வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

இந்தியா 32.5 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான ஆயுதங்களை கொள்வனவு செய்துள்ளது.

இராணுவத்தை நவீன மயப்படுத்தும் நோக்கில் அடுத்த ஐந்து ஆண்டுகளில் இந்தியா ஆயுத கொள்வனவிற்காக 50 பில்லியன் அமெரிக்க டொலர்களை செலவிட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவ ரீதியாக சீனா வளர்ச்சியடைந்து வரும் காரணத்தினால் இந்தியாவும் கூடுதலாக இராணுவச் செலவுகளை மேற்கொண்டு வருவதாக மேற்படி நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

## ஐ.நா. நிபுணர்...

செயலாளர் நாயகம் பான் கீ மூனிடம் கையளிக்கப்படவிருக்கிறது.

இவ்வாறு கையளிக்கப்படும் இந்த அறிக்கை தொடர்பாகவும் அதில் குறிப்பிடப்பட்டிருக்கும் விதப்புரைகள் குறித்தும் ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபை உறுப்பினர்களுடன் மிக விரிவாக ஆராய்வதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் திட்டமிட்டுள்ளார்.

மேற்படி ஐ.நா நிபுணர் குழுவின் அறிக்கையில் விதப்புரை செய்யப்பட்ட விடயங்களை எவ்வாறு இலங்கை அரசாங்கத்தின் கடப்பாடுகளாக மாற்றிக்கொள்வது என்றும், அதற்கான இராஜதந்திர பொறிமுறை எவ்வாறு அமையவேண்டும் என்பது குறித்தும் ஐ.நா. செயலாளர் நாயகம் பாதுகாப்புச் சபையின் உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்தவுள்ளார்.

எதிர்வரும் ஏப்ரல் மாதக் கடைசியில் மேற்படி பேச்சுக்கள் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் இப்பேச்சுக்கள் உத்தியோகப்பற்றற்ற முறையிலேயே நடத்தப்படவுள்ளது.

இப்பேச்சுக்களின் பெறுபேறுகளைப் பொறுத்தே ஐ.நா சபையின் இலங்கை தொடர்பான அடுத்த கட்ட நடவடிக்கை அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## யுத்த அனுபவப்...

எதிர்வரும் மே மாதம் கொழும்பில் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில் பங்கேற்குமாறு பாதுகாப்பு அமைச்சகம் 54 நாடுகளுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

"முறியடிப்புப் தாக்குதல்" தொடர்பான தமது பட்டறிவினை இக்கருத்தரங்கில் தாம் பகிர்ந்து கொள்ளவுள்ளதாக இலங்கை படைத்துறை தெரிவித்திருந்தது.

அதேவேளை, கொழும்பு கலதாரி நட்சத்திர விடுதியில் எதிர்வரும் மே மாதம் 31ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள இந்த படைத்துறைக் கருத்தரங்கை தொடர்ந்து மூன்று நாட்களுக்கு நடத்துவதற்கு இலங்கை படைத்தரப்பு ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

இக் கருத்தரங்கில் கலந்து கொள்ளுமாறு இலங்கையின் படைத்துறைச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ 54 நாடுகளுக்கு அழைப்பிதழ்களை அனுப்பியுள்ள நிலையில், இந்த படைத்துறைக் கருத்தரங்கைப் புறக்கணிக்குமாறு மனிதவுரிமைகள் கண்காணிப்பகம் இந் நாடுகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இக் கருத்தரங்கில் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் செயலாளர் லலித் வீரதுங்க, படைத்துறைச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, மத்திய வங்கி ஆளுனர் அஜித் நிவாட் கப்ரால், தீவிரவாத முறியடிப்பு நிபுணர் கலாநிதி றொகான் குணரட்ன மற்றும் வன்னிப் போரில் பங்கெடுத்த படையதிகாரிகள் உட்படப் பலர் உரையாற்றவுள்ளனர்.

உலகளாவிய தீவிரவாதத்தை முறியடிப்பதற்காக இலங்கையின் அனுபவங்களை பகிர்ந்து கொள்ளும் நோக்கிலேயே இக் கருத்தரங்கு நடத்தப்படவுள்ளதாக இலங்கையின் படைத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

## இந்திய மாணவி....

அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் 24 வயதான தோஷா தாகர் எனும் மாணவி கொலை செய்யப்பட்டு அவரின் சடலம் சூட்கேஸ் ஒன்றில் அடைக்கப்பட்ட நிலையில் கால்வாயொன்றிலிருந்து கடந்த வெள்ளிக்கிழமை கண்டுபிடிக்கப்பட்டது.

இது தொடர்பாக 19 வயதான டானியல் ஸ்டெனி ரெஜினோல்ட் என்பவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர். தோஷா தாக்கரை பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியபின் கொலை செய்ததாக ரெஜினோல்ட் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இது தொடர்பான வழக்கு நேற்று திங்கட்கிழமை பர்வூட் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அவுஸ்திரேலியாவில் கல்வி பயிலும் தாக்கரின் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் சுமார் 20 பேர் நீதிமன்றிற்கு சமுகமளித்திருந்தனர்.

இக்கொலையினால் நாம் மிகுந்த அதிர்ச்சியடைந்துள்ளோம். இவ்விடயத்தில் இயன்றவரை விரைவாக நீதி கிடைக்க வேண்டும் என நீதிமன்றத்திற்கு வந்திருந்த தாக்கரின் நண்பர்கள் கூறியுள்ளனர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 மார்ச் 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.